புதுவிதி
PUTHU VITHI

விலை 20/=

பக்கங்கள் 24

08 டிசெம்பர் 2018

புதுமை : 03 விதி : 130

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'



புள்ளி வைத்தவர் ரவி
கோலம் போட்டவர் கிட்டு

மீண்டும் அரங்குக்கு வரும்
அரசியல்கைதிகள்

அற்புத காதல் பயணத்தின்
இறுதி அத்தியாயங்கள்...!

சட்டத்துக்கு அடங்குமா
பாதீனியம்?

'இந்தியன் 2' படத்திற்குப் பின் திரையுலகில் இருந்து விடைபெறுவேன் என அறிவித்துள்ளார் கமல்ஹாசன்.

சினிமாவில் இருந்து விலகிய பின் முழுநேர அரசியலில் ஈடுபடப் போகிறேன். ஆனாலும் எனது நிறுவனம் தொடர்ந்து படங்களை தயாரிக்கும் எனவும் அவர் கூறியுள்ளார்.

'கடாரம் கொண்டான்' படத்தில் நடித்து வருகிறார் விக்ரம். இந்நிலையில் அவரின் நடிப்பில் 300 கோடி இந்திய ரூபா செலவில் 'மஹாவீர் கர்ணா' படம் உருவாகிறது.

படத்துக்கான பூசை திருவனந்தபுரம் பத்மநாபசுவாமி கோயிலில் கடந்த வாரம் இடம்பெற்றது.



சிவகார்த்தி
'கனா' படம் வ
இப்படம்
சேதுபதியின் '
ஜெயம் ரவியி
வெளியாகின்ற
இதனால் தி
போட்டி நிலவ

அறிமுக இயக்குநர் பிரதீப் ரங்நாதன் இயக்கத்தில் ஜெயம் ரவி - காஜல் அகர்வால் நடிக்கும் புதிய படத்துக்கு 'கோமாளி' எனப் பெயரிட்டுள்ளனர்.

யோகி பாபு முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கவிருக்கிறார்.

செல்வராகவன் இயக்கத்தில் சூர்யா - ரகுல் ப்ரீத்சிங் - சாய் பல்லவி நடிக்கும் 'என்.ஜி.கே' படத்துக்கு, யுவன் ஷங்கர் ராஜா இசையில் சித் ஸ்ரீராம் - ஸ்ரேயா கோஷல் ஆகியோர் ஒரு பாடல் பாடியுள்ளனர்.



புதுவிதி
PUTHU VITHI

இனியொரு விதி செய்வோம் - அதை
எந்த நாளும் காப்போம்
தனி ஒருவனுக்கு உணவில்லையெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்.

புதுமை : 03 | 08 டிசெம்பர் 2018 | விதி : 130

மத்திய பிணை முறி மோசடி சிங்களம் - தமிழில் வெளியிட எதிர்ப்பு

மத்திய வங்கியில் இடம்பெற்ற தாகக் கூறப்படு பாரிய பிணைமுறி மோசடி தொடர்பாக பேப்பச்சுவல் நிறுவனத்தின் தலைவர் அர்ஜூன் மகேந்திரன் அவர்களும அதன் நிறைவேற்று முகாமையாளரும் கைது செய்யப்பட்டு பல மாதங்களாக விளக்கமறியிலில் வைக்கப்பட்டுள்ளளர். இவ்விகாரம் தொடர்பாக முன்னார் மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜூன் மகேந்திரன் பிரதான குற்றவாளியாகக் குற்றஞ்சாட்டப்பட்டு பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டுள்ளது. இவர் சிங்கப்பூரில் வசிப்பதாகவும் அவரைக் கைதுசெய்ய தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகக் கூறப்பட்டபோதிலும் அவர் இன்றும் செய்யப்படவுமில்லை. கைது செய்யப்படுவதற்கான அறிகுறியும் தென்படவில்லை.

இந்நிலையில் பிணை மோசடி தொடர்பான விசாரணை அறிக்கைளை இரு வாரங்களுக்குள் வெளியிடவேண்டுமெனக் கண்டிப்பான உத்தரவை விடுத்துள்ளார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன. இதையடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடளுமன்ற உறுப்பினரும் பேச்சாளருமான சுமந்திரன் அந்த அறிக்கையை சிங்களம் - தமிழ் ஆகிய மொழிகளில் வெளியிடவேண்டாம் என கேட்டுக்கொண்டிருந்தார் என சில தகவல்கள் வெளிவந்துள்ளன.

இந்த அறிக்கையில் ரணில் விக்கிரமசிங்க, ரவி கருணாநாயக்க போன்றோர் மீதும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன எனத் தெரியவருகிறது. இலங்கையின் அரச கரும மொழிகளாக சிங்களமும் தமிழும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

அப்படியான நிலையில் ஆங்கிலத்தில் மட்டும் மேற்டி அறிக்கையை வெளியிட வேண்டும் என ஒரு தமிழ் நாடளுமன்ற உறுப்பினர் கூறுவதாயின் அது விடை காண முடியாத கேள்வியை ஏற்படுத்துகின்றது. தமிழ் மொழிக்கு வழங்கப்பட்டுள்ள சிறு உரிமையைக் கூட ஆங்கிலம் படித்த தமிழ் கனவான்கள் பயன்படுத்தத் தடையாக இருப்பது மக்களால் பொறுத்துக்கொள்ள முடியாத விடயமாகும்.

இன்றைய குழப்ப நிலையில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டால் ரணில் தரப்புக்கு பலமான பின்னடைவை ஏற்படுத்தும் என கருதுவதாலேயே இது சிங்களத்திலும் தமிழிலும் வெளியிடப்படுவது எதிர்க்கப்படுவதாகக் கருதப்படுகிறது.

ஒரு சிலரின் நலன்களுக்கான ஓரினத்தின் மொழி உரிமையை மறுப்பது ஏற்றுக்கொள்ளப்பட முடியாததாகும். அதிலும் உரிமை பறிக்கப்பட்ட தமிழ் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இவ்வாறு செயற்பட்டால் அவர் தமிழ் மக்களுக்காகவா அல்லது ரணில் தரப்புக்காகவா செயற்படுகிறார் என்ற கேள்வி எழுகிறது. இந்தச் செய்தி உண்மையாக இருக்குமானால் நிச்சயமாக இது தமிழ் மக்களால் ஒருபோதும் மன்னிக்கமுடியாத பெரும் குற்றமாகும்.

உடுக்கை இழந்தவன் கைபோல்
இடுக்கண் களையுமாம் நட்பு

ரணிலைப் பிரதமராக்கும் நோக்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இல்லை

சுமந்திரன் உறுதியாகத் தெரிவிப்பு

தற்சமயம் ஏற்பட்ட அரசியல் குழப்ப நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, முன்னாள் பிரதமர் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணிக்கு ஆதரவாக செயற்படுவது மீண்டும் ரணிலை பிரதமராக்குவதற்கு அல்ல என்றும் தமிழ்மக்களின் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக உருவாக்கும் அரசியலமைப்புக்கு ஆபத்து வந்துவிடக்கூடாது என்பதற்காகவே என உறுதியாகத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் ரணிலைப் பிரதமர் பதவியில் இருந்து நீக்கியமை, நாடாளுமன்றம் கலைக்கப்பட்டவை போன்றவை 19ஆவது அரசியலமைப்புத் திருத்தத்துக்கு விரோதமானதாகும். அது தற்சமயம் அனுமதிக்கப்படுமானால் எதிர்காலத்தில் உருவாக்கப்பட உத்தேசித்த அரசியலமைப்புச் சட்டத்தில் அதிகாரப் பகிர்வு விவகாரங்கள் தொடர்பாக உருவாக்கப்படும் சட்டங்கள் மீறப்பட வாய்ப்பை ஏற்படுத்திவிடும் எனவும் அதன் காரணமாகவே தாம் அரசியல் சட்டம் மீறப்படுவதற்கு எதிராகச் செயற்படுவதாகத் தெரிவித்தார் தற்சமயம் உள்ள அரசியல் சூழலில் எதிர்காலத்தின் புதிய அரசியலமைப்பை உருவாக்க சாத்தியம் உண்டா என்பது பற்றி அவர் எதுவும் சொல்லவில்லை.

1956ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க பிரித்தானியர் வசமிருந்த திருமலையில் அமைந்திருந்த கடற்படைத் தளம், விமானப் படைத்தளம் என்பவற்றை வெளியேற்றிய போது தமிழரசுக்கட்சி அதைத் தீவிரமாக எதிர்த்தது. அதுமட்டுமின்றி இலங்கையை விட்டு மேற்படி படைத் தளங்களை அகற்ற வேண்டாம் என பிரித்தானிய மகாராணிக்கு தந்தியும் அடித்தது. அதாவது அதன் மூலம் தங்கள் ஏகாதிபத்திய விசுவாசத்தை வெளிப்படுத்தினர்.

ஆனால் அவர்கள் தமிழ் மக்களிடம் சொன்ன காரணம் பிரிட்டன் வெளியேறினால் அது சிங்களவர்களுக்குச் சொந்தமாகிவிடும் எனப் பிரசாரம் செய்து அவர்கள் தங்களை நியாயப்படுத்தினர். பிரிட்டன் அப்போது வெளியேறியதால்தான் இப்போது வடக்கு, கிழக்கு முழுவதும் சிங்களப் படைகள் நிலைகொண்டுள்ளன என்பதுதானா என்பது பற்றி அவர்கள் எதுவும் சொல்லவில்லை. எனினும் அரசியல் அமைப்பை பாதுகாக்கும் மரபை நிலைநிறுத்த தாம் ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்து செயற்படுவதாக சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

போகாத ஊருக்கு போகாத
வழிகாட்டும் புத்திசாலிகள்

கடந்தவார சமூக வலைத்தளங்களில்





புதுவிதி
PUTHU VITHI

தொடர்புக்கு:
ஆசிரிய பீடம் : 021 493 7777
விநியோகம் : 021 493 2222
விளம்பரம் : 021 493 1111

107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
puthuvithi@gmail.com

கேள்விக்கு உள்ளாகும் நிறைவேற்று அதிகாரம்

பிரதமர் இல்லாத – அரசாங்கம் இல்லாத நாட்களாக கடந்த வார இறுதி கடந்து விட்டது. பிரதமர்– அமைச்சரவை இல்லாத ஆட்சி என்பதால் பல முக்கிய விடயங்கள் கிடப் பில் கிடக்கின்றன. நாடாளுமன்றம் தீர்மானிக்க வேண்டிய முக்கிய முடிவுகளை எடுப்பதற்குக்கூட நீதிமன்றை நாட வேண்டிய நிலை. இவ்வாறான நிலைமைகளால் நாடு எதிர்கொள்ளும் பாதிப்புக்கள் பல... பல...!

ஏற்கனவே வரவு – செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படாததால் ஏற்பட்ட பொருளாதார இழப்புகளை – பாதிப்புக்களை ஈடு செய்ய முடியவில்லை. பாதிப்புகளை ஓரளவுக்கேனும் குறைத்து நாட்டின் நிர்வாகத்தை சீராக்கிச் செல்ல இடைக் கால வரவு – செலவுத் திட்டம்கூட முன் வைக்கப்படவில்லை. இதன் பாதிப்புக்கள் – விளைவுகள் இந்த மாத இறுதியில் இன்னும் அதிகமாக இருக்கும் எனச் சுட்டிக் காட்டப்படு கின்றது.

அனேகமாக இந்த வாரத்தில் புதிய பிரதமர் நியமிக்கப் படக்கூடும். அவர் பதவி ஏற்ற பின்னர், நிலைமைகளை சரி செய்ய வாய்ப்புகள் உள்ளன. ஆனால் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன ஏற்படுத்திய குழப்பம் பொருளாதாரத்தில் மேலும் வீழ்ச்சியை ஏற்படுத்தியது. இதனால் ஏற்பட்ட இழப்புகளை சரி செய்ய பொருட்களின் விலைகள் மேலும் உயர்த்தப்படும் வாய்ப்பு உள்ளது.

எனினும், தேர்தலுக்கான வாய்ப்புகள் அண்மித்து நிற்கும் சூழ்நிலையில் பொருள் விலையேற்றத்தை அமைய வுள்ள எந்த அரசாங்கமும் அறிவிக்காது. ஆனாலும் அடுத்து வரும் ஆட்சிப் பகுதியில் மக்கள் விலைவாசி உயர் வுக்கு முகம்கொடுத்தே ஆகவேண்டிய கட்டாயம் உள்ளது. புதிய அரசியலமைப்பு விடயத்தை முன்னெடுத்த 'நல்லாட்சி அரசாங்கம்" அதை சாத்தியப்படுத்தவில்லை. ஆனால் அதன் பங்காளியான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஏற்படுத்திய அரசியல் குழப்பங்கள் புதிய அரசியல் சாசனம் அவசியம் என்ற நிலையை வலுவாக எடுத்துச் சொல்லியுள்ளது.

எது எப்படி இருப்பினும், 'நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமையை ஒழிப்பேன்" சபதமிட்ட மைத்திரி பால சிறிசேன அதை செய்ய முனையவில்லை. மாறாக தனது அதிகாரத்தை வெளிப்படுத்துவதையே நோக்காகக் கொண்டிருந்தார். ஆனால் கடந்த ஒன்றரை மாதத்தில் அவர் ஏற்படுத்திய குழப்பத்தால் அவருடைய அதிகாரம் நீதிமன்ற ஆணைக்குக் கட்டுப்பட வேண்டியதாகிவிட்டது. இவ் வாறான நிலைமை இனி வரும்காலத்திலும் தொடரக்கூடிய சாத்தியம் உள்ளது. இதை நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமைக்கு போடப்பட்ட முட்டுக்கட்டையாகவே பார்க்க முடியும்.

புதிய பிரதமர் விவகாரத்திலும் நீதிமன்றம் ஜனாதிபதி யின் நிலைப்பாட்டுக்கு எதிரான தீர்ப்பை வழங்கும் சூழல் ஏற்பட்டால் சர்வாதிகாரப் போக்குக் கொண்ட நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமைக்கு அடிக்கப்படும் சாவு மணியாகப் பார்க்கலாம். நாடாளுமன்ற ஜனநாயகத்தை விரும்பும் மக்களின் விருப்பமும் இதுதான்.

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'

ஈழத்தின் இறுதிப் போர் சாட்சியாய்...! 30

- வன்னிமகள்
எஸ்.கே.சஞ்சிகா

சில உறவுகளின் ஒட்டுதலும் தேடலும் சுயநலம் கொண்டது என்பதை நான் அறிவேன். கணவரின் அத்தானும் அதற்கு விதிவிலக்கல்ல. நாங்கள் இடம்பெயர்ந்து வலைஞர்மடத்திற்கு வந்தபோது யாரோ முகமறியாத உறவுகள் தமது காணியில் தற்காலிகமாக வீடமைத்து இருக்க இடம் தந்தார்கள். எங்கள் குழந்தைகளோடும் எம்மோடும் மிக அன்போடு பழகினார்கள். மனிதம் உறவு என்பதெல்லாம் மனதைப் பொறுத்தே அமையும். அது பிறந்தவழி உறவாகவோ புகுந்தவழி உறவாகவோ இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. இப்படியான உறவுகள் கிடைப்பது உறவுகளற்ற என்னைப்போன்றோருக்கு வரமே.

உண்மையிலேயே வரவேற்பதிலும் சுயநலமற்ற அன்பைக் காட்டுவதிலும் பகிர்ந்துண்டு வாழ்வதிலும் வன்னி மக்களை வெல்ல முடியாது. சத்தியமாக ஒப்பீட்டளவில் இந்த நல்ல பண்பு யாழ்ப்பாணத்து மக்களிடமில்லாதது சாபக்கேடான விடயமே.
வலைஞர்மடத்தில் தாமரைக்குளத்துக்கு கிட்டவாக இருந்த தென்னந்தோப்பு வளவில் கணவரின் அக்கா இருப்பதாக கேள்விப்பட்டு எனது கணவர் பார்க்கப் போனார். தானாடா விட்டாலும் தன் தசையாடும் என்று சும்மாவா சொன்னார்கள். ஆனால் சில தசைகள் சுயநலத்தோடுதானே ஆடுகின்றன.

அக்கா குடும்பத்தைப் பார்த்து அளவளாவி விடைபெறும் போது 'பிள்ளைகளோடு நானும் வந்து இங்கொரு வீடு போட்டு இருக்கவா?" என அக்காவோடு இருக்கும் ஆவலில் கணவர் கேட்டாராம். அதற்கு அவர், 'இங்கு நாங்களே இருக்க வசதியில்லை" எனக்கூறினாராம். பின்னர் இரண்டு நாட்களின் பின் அங்கு சென்றபோது கணவரின் அக்கா குடும்பம் இருந்த காணியில் அவர்களுடைய குடும்ப நண்பர் ஒருவரின் குடும்பத்தை குடியிருத்தி இருந்ததாகவும் கூடப்பிறந்த ஒரேயொரு தம்பி என்னை மதிக்கவில்லை எனவும் மனதுக்குள் மூடி வைக்க முடியாது கூறி கவலைப்பட்டார்.

இந்த அக்கா குடும்பத்திற்கும் எங்களுக்கும் இடையில் காப்பு தொடர்பான பிரச்சினை இருந்ததையும் அதனை ஒலிம்பிக்குமார் என்ற மாந்திரீகர் மூலமாக அறிந்த கதையையும் பின்னர் காணாமல் போன காப்பு அவர்களுடைய வீட்டிலேயே கண்டெடுத்த கதையையும் அதனால் வந்த மனஸ்தாபங்களையும் ஆரம்பத்தில் கூறியிருந்தேன். இந்தக் காரணங்களால் அப்போது எங்களுக்கும் அவர்களுக்கும் மத்தியில் உறவுநிலை பிளவுபட்டிருந்தது.

இப்போது மனிதர் காயமடைந்த நிலையிலும் குடும்ப உறுப்பினர்கள் போர் அமளிதுமளியில் கைவிட்ட நிலையிலும் இருந்தார். இங்கு அவர் வந்ததிலிருந்தே தெரிந்தவர்கள் நண்பர்களைத் தேடி அலைந்து யாரும் கிடைக்காத நிலையிலும் இராணுவத்தினர் கொடுத்த சாப்பாட்டைப் பெறச் சென்றபோது அங்கு சிறுமி இறந்தபோது கண்டும் காணாததுபோல மொட்டாக்கோடு நகர்ந்ததையும் நானும் தோழியும் கண்டிருந்தோம். ஆனால் தெரியாததுபோல வில்லங்கமாக மறைப்பிடுபவர்களை வெற்றிலை வைத்து அழைக்கவேண்டிய தேவை இல்லாததால் நானும் தெரியாததுபோலவே நடந்து கொண்டேன்.

தனக்குத் தெரிந்தவர்களைத் தேடித்தேடி யாரோடும் தங்கிவிடத்தேடியும் கிடைக்காத நிலையில் தான் எங்களோடு ஒட்டிக்கொண்ட மனிதராக கணவரின் அத்தான் அல்லது காயமடைந்த அவரை யாரும் இணைத்துக் கொள்ளாமையும் காரணமாக இருக்கலாம். கால்களில் காயமடைந்திருந்த அவருக்கு இப்போதைய தேவை தன்னுடய வயோதிப உடல்நிலையோடு யாருமற்றுப் பயணிக்க முடியாது என்ற பயமும் பாதுகாப்பும். அத்தோடு எங்களுக்கு என்ன கெடுதல் செய்தாலும் தேடிவரும்போது அரவணைத்து அன்பு செய்வோம் என்ற எங்களின் பலவீனம் அறிந்ததால் வந்த நம்பிக்கை.

அறுபது வயதை நெருங்கிய அவரின் வயோதிபதேகம் சுருங்கிக் களைப்படைந்திருந்தது. கண்கள் அகடவிகடமாக கதைத்துச் சிரித்தாலும் தன்னைக் கைவிட்டு விடவேண்டாம் என்ற முதுமையின் வலிகுன்றிய பதற்றமான வேண்டுதல் இருந்தது. அடிக்கடி எல்லோரும் தன்னை விட்டு விட்டுப் போய்விட்டார்கள் என்ற புலம்பல் இருந்தது. இந்தக் காயப்பட்ட காலோட நடக்க ஏலாமல் கொதிக்குது என்ற புலம்பல் இருந்தது.

மிகவும் கஷ்டப்பட்டு ஒட்டிக்கொள்வதற்காக சாப்பாட்டுடன் வந்த கதைக்குப் பின் பெரும் சுயநலம் இருந்த கதையை கணவரும் அறிவார். பாம்பின் கால் பாம்பறியும் என சும்மாவா சொல்லி வைத்தார்கள்?ஒலிபெருக்கியில் 'அரசியல்த்துறை பெண் போராளி தமிழினி சரணடைந்து இருக்கிறார்" என இராணுவத்தினர் அறிவித்துக் கொண்டிருந்தார்கள். நெஞ்சுக்குள் நிறைந்த கவலை வாட்டி வதைத்தது. கடவுளே பிடிச்சு சித்திரவதை செய்யப் போறாங்கள். இப்பிடி முடியும் என்று யார் கண்டது? என எங்களருகில் இருந்த வயோதிபத்தம்பதிகள் பேசிக்கொண்டனர்.

"தமிழினியை பிடிக்கத்தான் வேணும். எங்கட பிள்ளைகளை மும்முரமாக பிடிச்சு சாகடிச்சிட்டு இவையள் மட்டும் தப்பீட்டினம். இவைக்கு இதுவும் வேணும் .இன்னும் வேணும்." என பக்கத்தில் பனை வடலிக்குள் படுத்திருந்த தாயொருத்தி ஆவேசத்தோடு பேசிக்கொண்டிருந்தார். இவர்களுக்கு இப்போ இருக்கும் மனநிலையில் எப்படிச் சொன்னாலும் விளங்கப்போவதில்லை.

(சாட்சியம் நீளும்)

மீண்டும் அரங்குக்கு வரும் அரசியல்கைதிகள்

■ யோகநாராயணன்

காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், அரசியல் கைதிகள் விடுதலை, இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்ட தமிழ் மக்கள் மீதான நியாயமற்ற ஒடுக்குமுறை நடவடிக்கைகளுக்கு எதிராக என நாட்கள் மாதங்களாக - மாதங்கள் வருடங்களாகிய போதும் போராட்டங்கள் தொடர்ந்த வண்ணமுள்ளன. ஆனால் அரச தரப்போ, தமிழ்த் தலைமைகளோ இடையிடையே வாக்குறுதிகள் வழங்குவது; சட்ட காரணங்களைக் காட்டி ஏமாற்றுவது எனக் காலம் கடத்தப் படுகிறதேயொழிய உருப்படியான எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

சில வழக்குகளில் குற்றங்கள் நிரூபிக்கப்படாமையினாலும் சட்டத்தரணிகளின் வாதங்கள் காரணமாகவும் கைதிகள் விடுவிக்கப்படும்போது சில அரசியல்வாதிகள் தாங்கள் அரசாங்கத்துக்குக் கொடுக்கும் அழுத்தம் காரணமாகவே கைதிகள் விடுவிக்கப்பட்டனர் என வெட்கமின்றிக் கூறி உரிமை கொண்டாடத் தயங்குவதில்லை. இப்படியாக அரசியல் கைதிகளின் அவலநிலை நீடிக்க இப்பிரச்சினையை இரு புதுமுகங்கள் கையில் எடுத்துள்ளன. ஒருவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து வெளியேறி மஹிந்த அரசாங்கத்தில் இணைந்து பிரதியமைச்சர் பதவி வகிக்கும் மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன். மற்றவர் மைத்திரிபால சிறிசேனவால் நியமன நாடாளுமன்ற உறுப்பினராக்கப்பட்டுத் தற்சமயம் பிரதி விவசாய அமைச்சராகவுள்ள அங்கஜன் இராமநாதன்.

மஹிந்த ராஜபக்ஷவின் மூத்த புதல்வரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய நாமல் ராஜபக்ஷவை வியாழேந்திரன் பதினைந்து தடவைகளுக்கு மேல் தொடர்பு கொண்டு கைதிகள் விடுதலை பற்றிப் பேசியதாகவும் அவர் அது தொடர்பாக ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுப்பதாகக் கூறியதாகவும் தெரியவருகின்றது. எதிர்கால ஜனாதிபதிக் கனவுடன் அரசியலில் களமிறங்கியுள்ள நாமல் ராஜபக்ஷ தமிழ் மக்களின் ஆதரவைத் திரட்டும் முகமாக இடையிடையே தமிழ் மக்களுக்கு ஆதரவான கருத்துகளை வெளியிட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

எப்படியிருப்பினும் இவர்களின் முயற்சியின் பேரில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இந்த விவகாரம் தொடர்பாக எதிர்வரும் 5 ஆம் திகதி சட்டமா அதிபர், நீதியமைச்சர், பாதுகாப்புச் செயலர் ஆகியோருடன் பேச்சுகளை நடந்துள்ளதாகத் தெரிய வருகின்றது. இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சிலரும் கலந்து கொள்ளவுள்ளதாக உறுதிப்படுத்தப்படாத சில தகவல்கள் கசிந்துள்ளன. ஆனால் இப்பேச்சுகள் ஆக்கபூர்வமான பலனைத் தர முடியுமா என்ற கேள்வியைத் தமிழ் மக்கள் மத்தியில் கடந்த கால அனுபவம் எழுப்பத் தவறவில்லை.

ஏறக்குறைய இரண்டு

வருடங்களின் முன்பு கைதிகள் நடத்திய தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தையடுத்து ஜனாதிபதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரிடம் கைதிகளை விடுவிக்க நடவடிக்கை எடுப்பதாக வாக்குறுதியளித்தார். அதைக் கைதிகளிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தெரிவித்ததையடுத்து கைதிகள் தங்கள் போராட்டத்தைக் கைவிட்டனர்.

ஜனாதிபதி சட்டமா அதிபர், நீதியமைச்சர், பாதுகாப்புச் செயலர், சுமந்திரன், இரா. சம்பந்தன் ஆகியோருடன் கைதிகள் விடுதலை தொடர்பாகப் பேச்சுக்களை நடத்தினார். அதன் முடிவில் கண்துடைப்பாக சில வாக்குறுதிகள் வழங்கப்பட்டாலும் ஆக்கபூர்வமான எந்தப் பதிலும் கிட்டவில்லை. அதற்கு இரு காரணங்கள் காணப்பட்டன.

ஒன்று இப்பேச்சுக்களின்போது நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கைதிகள் தரப்பில் பேரம் பேசுவதற்குப் பதிலாக அவர் கைதிகளின் விடுவிப்பு தொடர்பான சட்டச் சாத்தியங்கள்

குறித்தே கவனம் செலுத்தினார். சர்வதேச மனித உரிமை நியமங்களுக்கு விரோதமான பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்ட அரசியல் கைதிகளின் விடுதலையை அதே சட்டங்களூடாகப் பெறுவது சாத்தியமாகி விட முடியுமா? அந்த இடத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் சட்டத்தரணிகளாகச் செயற்பட்டனரேயொழிய கைதிகளின் பிரதிநிதிகளாகச் செயற்படவில்லை.

மற்றது, அன்றைய பேச்சுகளின் போது கைதிகளின் விடுதலைக்கு முட்டுக்கட்டையாகச் செயற்பட்ட வர்கள் சட்ட மா அதிபரும் நீதியமைச்சரும் இன்றும் அதே சட்டமா அதிபர்தான் பேசப் போகிறார். அன்று நீதியமைச்சராக இருந்த விஜயதாச ராஜபக்ஷவே தற்சமயம் மீண்டும் நீதியமைச்சராகி விட்டார். அவரே தற்சமயமும் பேச்சுகளில் கலந்து கொள்ளப் போகிறார். இப்படியான ஒரு சூழ்நிலையில் வியாழேந்திரனும், அங்கஜனும் எடுக்கும் முயற்சிகள் வெற்றி பெறுமா என்பது சந்தேகமே?

பெரும்பாலான வழக்குகளில் ஒப்புதல் வாக்குமூலங்களே பிரதான சாட்சியமாகக் கொள்ளப்படுகின்றது. ஆனால் இந்த ஒப்புதல் வாக்குமூலங்கள் கொடிய சித்திரவதை மூலம் பெறப்பட்டவை என்பதில்

எவ்வித இரகசியமுமில்லை. குறிப்பாக வடபகுதியில் இடம்பெற்ற அரசியல் கைதிகளின் வழக்குகளில் ஒப்புதல் வாக்குமூலத்தை அடிப்படையாகக் கொண்டு குற்றவாயிகயாகத் தீர்மானிக்க முடியாதெனக் கூறப்பட்டு அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். அதேவேளை கொழும்பு, அனுராதபுரம் ஆகிய இடங்களில் விசாரிக்கப்பட்ட வழக்குகளில் ஒப்புதல் வாக்குமூலத்தை அடிப்படையாகக் கொண்டு ஆயுள் தண்டனை, 100 வருடச் சிறை, 201 வருடச் சிறை எனத் தண்டனைகள் வழங்கப்பட்டன.

எனவே பேச்சுகளின்போது நிதியமைச்சரோ, சட்டமா அதிபரோ பயங்கரவாதத் தடைச் சட்டம் போன்ற சட்டங்களிலேயே தொங்கிக் கொண்டிருப்பர். அப்படியான நிலையில் நியாயபூர்வமான தீர்வை எட்ட முடியுமா?

எனவே, அங்கஜன், வியாழேந்திரன் ஆகியோர் கைதுகள் பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்ட வேண்டும் என அழுத்தம் கொடுக்க வேண்டும். நாமல் ராஜபக்ஷ மூலம் அவர்கள் அதைச் செய்ய முடியும்.

பத்து வருடங்களுக்கு மேலாக மஹிந்த அரசில் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராக இருந்தும் டக்ளஸ் தேவானந்தா செய்யாததை மூன்று வருடங்களுக்கு மேலாக ஐக்கிய தேசிய முன்னணி அரசுடன் இணைந்து அரசியல் நடத்திய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செய்ய முடியாததை வியாழேந்திரனும் அங்கஜனும் செய்து முடிப்பார்களானால் நிச்சயமாக அது ஒரு சாதனைதான். வழமைபோல அரசியல் கைதிகள் விடுதலை ஒரு பேசுபொருளாகச் சில நாட்கள் இருந்து விட்டு மறக்கப்படும் விடயமாக மாறி விடாமல் பயனுள்ள வகையில் தீர்வுகிட்ட வேண்டும் எனவே தமிழ் மக்கள் விரும்புகின்றனர்.

கானலை நீர் என்று காட்டினானாம்
கலைச்சு கலைச்சுக் களைச்ச மான்
நாக்கு வரண்டு சுருண்டு
விழுந்ததாம்

அரசியல் சூழ்ச்சிக்குள் முன்னாள் போராளிகள்?



மட்டக்களப்பு மாவட்டம் போர் கால நிலைக்குத் திரும்பியுள்ளது. வவுணதீவில் இரு பொலிஸார் கொலையைத் தொடர்ந்து சோதனைகள் - விசாரணைகள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. முன்னாள் போராளிகள் கைது செய்யப்படுவதுடன் அவர்கள் மீது அடக்குமுறைகளும் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. மஹிந்த அரசாங்கத்துக்கு எதிராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கையொப்பமிட்டதைத் தொடர்ந்தே இந்நடவடிக்கை முடுக்கி விடப்பட்டது.

வவுணதீவு பொலிஸார் கொலை தொடர்பில் கருணா என அறியப்பட்ட விநாயகமூர்த்தி முரளிதரன் மீது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் குற்றஞ்சாட்டினார். இதைத் தொடர்ந்து இக்கொலைகளைச் செய்தவர் என்ற சந்தேகத்தில் கிளிநொச்சியில் ஒருவரும் மட்டக்களப்பில் இருவருமாக மூன்று முன்னாள் போராளிகள் கைது செய்யப்பட்டனர்.

மட்டக்களப்பில் வீதிச் சோதனைகள் இடம்பெற்றதுடன், முன்னாள் போராளிகளின் வீடுகளுக்குச் சென்ற பொலிஸார் அங்கு சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டதுடன் முன்னாள் போராளிகளையும் அவர்களின் குடும்பத்தவர்களையும் விசாரணைகளுக்கு உட்படுத்தினர். இதன்போது மோசமான வார்த்தைப் பிரயோகங்களிலும் - அத்துமீறல்களிலும் பொலிஸார் ஈடுபட்டனர் எனக் குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்படுகின்றன.

இந்த விவகாரம் தொடர்பில் கடந்த வாரம் நாடாளுமன்றில் உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்ள்ஸ் நிர்மலநாதன், சிறிநேசன், யோகேஸ்வரன், கோடீஸ்வரன் ஆகிய எம்.பிக்கள் 'வவுணதீவு பொலிஸார் கொலை அப்பட்டமான அரசியல் சூழ்ச்சி" எனச் சாடியிருந்தனர். மஹிந்த ராஜபக்ஷவின் பதவிக் காலத்தில் ஏதாவது நொண்டிச் சாட்டுக்ககளை காரணங்காட்டி முன்னாள் போராளிகள் அடிக்கடி விசாரணைக்கு உட்படுத்தப்படுவதும் கைதாவதும் வழக்கமாக இருந்தது.

ஆட்சி மாற்றத்தின் பின்னரும் இந்த நடவடிக்கை சற்றுக் குறைந்திருந்தாலும் முன்னாள் போராளிகள் கண்காணிக்கு உட்படுத்தப்படுவதோ கைது செய்வதோ நிறுத்தப்படவில்லை. சுமந்திரன் எம்.பியை கொல்ல முயன்றனர் - சதித் திட்டம் தீட்டினர் எனக் கூறி முன்னாள் போராளிகள் மீதான அடக்குமுறைகள் தொடர்ந்தன. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன திடீரென ரணில் விக்கிரமசிங்கவை பிரதமர் பதவியில் இருந்து அகற்றி விட்டு மஹிந்த ராஜபக்ஷவை பிரதமர் பதவியில் அமர்த்தினார்.

இதைத் தொடர்ந்து நாட்டில் அரசியல் குழப்பங்கள் உச்சம் பெற்றன. இவற்றுக்குத் தீர்வுகாண நீதிமன்றை நாட வேண்டிய நிலைக்கு நாடு தள்ளப்பட்டது. இவ்வாறான நிலையிலேயே வவுணதீவில் இரு பொலிஸார் வெட்டியும் - சுட்டும் கொல்லப்பட்டனர். இந்த நிலையிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கருணாவைக் குற்றஞ்சாட்டியது. ஆனால், மஹிந்த அரசோ முன்னாள் போராளிகள் மீது பழியைப் போட்டு அவர்களை வேட்டையாடத் தொடங்கியது.

வடக்கு, கிழக்கில் எங்கு எந்தக் குற்றம் நடந்தாலும் முன்னாள் போராளிகளை சந்தேகவாதிகளாக பிடித்து விடுவதையும் - குற்றவாளிகளாக்குவதையும் பொலிஸாரும் அரசாங்கமும் வாடிக்கையாகவே வைத்துள்ளன. இவ்வாறான பின்னணியிலேயே தற்போதைய அரசியல் குழப்ப நிலைக்குள்ளும் முன்னாள் போராளிகள் குறி வைக்கப்பட்டுள்ளனர்.

2014 இல் கோபி, அப்பன், தேவியன் என முன்னாள் போராளிகள் மூவர் ஆட்சியைத் தக்க வைக்கவும் - மஹிந்தவின் வாக்குப் பலத்தை அதிகரிக்கவும் பலிக்கடா ஆக்கப்பட்டார்கள். பெரும்போர் ஒன்றைத் தொடுப்பது போன்று ஏற்கனவே கைது செய்யப்பட்டவர்கள் திட்டமிட்டு விடுவிக்கப்பட்டு அநியாயமாக சுட்டுக் கொல்லப்பட்டார்கள். விடுதலைப் புலிகளின் பெரும் படைக்கு எதிராகப் போர் புரியச் செல்வது போன்று மூன்று பேரை தேடிப் பிடித்துக் கொன்றது இராணுவம். இத்தகைய திட்டமிட்ட நாடகங்கள் பின்னாலில் அரங்கேறாத போதிலும் முன்னாள் போராளிகள் அடிக்கடி கைதாகினர்.

இந்நிலையிலேயே மீண்டும் இப்போது விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவு இயங்குகிறது எனக் குற்றம் சாட்டி முன்னாள் போராளிகள் குறி வைக்கப்படுகின்றனர். போர் முடிவுக்கு வந்தபின்னர் 2016 இல் மாவீரர்களை மக்கள் ஓரளவு சுதந்திரமாக நினைவுகூரத் தலைப்பட்டனர். இதைத் தொடர்ந்து இந்த ஆண்டு விடுதலைப் புலிகளின் காலத்தில் மாவீரர்நாள் எப்படிக் கடைப்பிடிக்கப்பட்டதோ அதேபோன்று கடைப்பிடிக்கப்பட்டது. இதற்குக் காரணம் முன்னாள் போராளிகள் ஓரளவு சுதந்திரமாக இயங்கக்கூடிய நிலை ஏற்பட்டமையே.

சிறப்பாகக் கடைப்பிடிக்கப்பட்ட மாவீரர் நாள் நிகழ்வைத் தொடர்ந்து முன்னாள் போராளிகள் மீண்டும் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றுவிடலாம் என்ற சிறுபிள்ளைத் தனமான எண்ணங்களும் முன்னாள் போராளிகள் மீதான குற்றச்சாட்டுகள் - கைதுகளுக்குக் காரணமாக இருக்கலாம். பொலிஸாரும் - அரசாங்கமும் சகட்டுமேனிக்கு சாடும் குற்றச்சாட்டுகளால் முன்னாள் போராளிகள் நிம்மதியிழந்து போயுள்ளனர். அரசியல் கட்சி, சமூக வாழ்வு என முன்னாள் போராளிகள் எழுச்சி காணும் இத்தருணத்தில் அவர்கள் மீதான அடக்குமுறையாகவும் இதனைப் பார்க்கலாம்.

இவை எதிலும் சாராமல் தங்கள் குடும்பத்தை வழிநடத்தும் முன்னாள் போராளிகள்கூட திட்டமிட்ட நாடகக் குற்றங்களால் கைதுக்கு உள்ளாகின்றனர். இதனால் ஏற்பட்ட அச்ச நிலையைப் போக்க வேண்டியவர்கள் வாளாவிருக்கின்றனர். எது எப்படி இருப்பினும் இந்த அரசியல் குழப்பத்துக்குள்ளும் சூழ்ச்சிக்குள் சிக்கியுள்ளனர் முன்னாள் போராளிகள். அவர்களுக்கான பாதுகாப்பு என்பது எப்போதும் கேள்விக்குறிதானா? ●

அற்புத காதல் பயணத்தின் இறுதி அத்தியாயங்கள்...!



அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் ஹெர்பெர்ட் வக்கர் புஷ் அண்மை யில் காலமானார். இவர் அமெரிக்க வரலாற்றி லேயே நீண்ட காலம் வாழ்ந்த ஜனாதிபதி என்ற பெருமைக்குரியவர். அமெரிக்க அரசியல் வரலாற்றைப் பொறுத்தவரை புஷ்ஷுக்கு ஒரு தனித்துவம் உண்டு. அவர் பதவி வகித்த காலகட்டத்தில் மிகவும் புகழப்பட்ட வரும் அதேசமயம் மிகவும் இகழப்பட்டவரும் இவரே. செப்ரெம்பர் 11 தாக்குதலை முறியடித்தபோது உயர்ந்த இவர், பின்னர் அமெரிக்கா கண்ட பெரும் நிதி நெருக்கடி யின்போது மிகவும் தாழ்ந்து கொண்டார். இருந்தும் இவர் தனது பதவிக்காலம் முடிவடைந்து சென்றபோது அமெரிக்க மக்களின் மதிப்பிற்குரியவராகவே விடை பெற்றுச் சென்றார்.

இவர் பதவி வகுத்த காலப்பகுதியிலேயேதான் 80 இலட்சம் பேர் பிற தேசத்திலிருந்து அமெரிக்காவில் குடியேறினர். அதேசமயம் 120 இலட்சம் பேர் சட்டரீதியற்ற குடியேற்றவாசிகளாக "தற்காலிகமான விருந்தினராகப் பணி புரியும்" திட்டத்தின் கீழ் பிறதேசத்து மக்களை அமெரிக்காவுக்குள் குடியேறித் தொழில் புரிய அனுமதிக்குமாறு புஷ் அமெரிக்கா காங்கிரஸோடு வாதாடினார். அதே சமயம் அமெரிக்க - மெக்ஸிகோ எல்லைப் பாதுகாப்பைப் பலப்படுத்த அதிக நிதியை ஒதுக்கக் கோரினார். ஏறத்தாழ 6000 எல்லைப் பாதுகாப்புப் படையினரைப் பணிக்கமர்த்தப் பணித்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஜோர்ஜ் ஹெர்பெர்ட் வாக்கர் புஷ் பற்றி அவர் மனைவி பார்பராவின் அனுபவம் இப்படித்தான் இருந்தது. தான் இறப்பதற்குச் சில ஆண்டுகள் முன்னர் தன் கணவர் குறித்து பார்பரா எழுதிய வரிகள் இவை.

'நான் என் முதுமையை நோக்கி நடைபோடுகிறேன். 72 ஆண்டுகளுக்கு முன்னர் கரம்பிடித்த என் கணவரை இன்னும் அதிகமாகக் காதலித்துக் கொண்டிருக்கிறேன். எனக்கு உலகத்தைக் கொடுத்தவர் புஷ். அவர் சிறந்த மனிதர். அதுமட்டுமல்ல இறக்கும் தறுவாயிலும் அவர் சொன்னது என்ன தெரியுமா?, 'என் கணவரை நான் இன்னும் அதிகமாகக் காதலிக்கிறேன்", என்பதுதான். காதலாக வாழ்ந்தவர்கள், காதலோடு வாழ்ந்தவர்கள், சில மாத இடைவெளியில் காதலுடனே மரணத்தைத் தழுவிவிட்டார்கள்.

புஷ் - பார்பரா காதல் கதையைப் பற்றி சில வரிகளில் எழுதிவிட முடியாது. ஏறக்குறைய 80 ஆண்டுகளாக அனைத்துச் சூழல்களிலும் இறுக்கமாகக் கரங்களை பற்றிக் கொண்டு ஒருவருக்கொருவர் அன்போடு நடைபோட்டனர். புஷ்ஷுக்கு ஏற்பட்ட பல நெருக்கடிகளிலிருந்து பார்பராவின் காதல் மட்டுமே அவரை மீண்டுவரச் செய்திருக்கிறது.

ஜோர்ஜ் ஹெர்பெர்ட் வாக்கர் புஷ் (George Herbert Walker Bush) 1924 ஆம் ஆண்டு மசசூ செட்ஸ் மாகாணத்தின் மில்டன் ரவுனில் பிறந்தார். அண்டோவரில் உள்ள புகழ்பெற்ற பிலிப்ஸ் அக்கடமியில் கல்வி பயின்றார். வக்கர் புஷ் ஒரு சகலகலாவல்லவன். ஆம், விளையாட்டு, கலை, படிப்பு அனைத்திலும் கெட்டிக்காரராக இருந்தார். படிக்கும்போதே, மாணவர்கள் அமைப்பின் தலைவர், பேஸ்பால் கப்டன், உதைபந்தாட்ட அணிக் கப்டன் எனப் பல்வேறு தலைமைப் பொறுப்புகளை வகித்தார்.

அவர் படிப்பை முடிக்கும் காலகட்டத்தில் தான் ஜப்பான் பேர்ள் துறைமுகத் தாக்குதல் (Pearl harbour attack) நடத்தியது. அமெரிக்கா ஆடிப்போனது. அந்த சம்பவத்துக்குப் பிறகு தான் புஷ் அமெரிக்க கடற்படையில் சேர்ந்தார். அப்போது அவருக்கு வயது 18 தான். கடற் படையில் இணைந்து 50இற்கும் மேற்பட்ட போர் படையில் (combat missions) முக்கிய பங்கு வகித்தார். இரண்டாம், உலகப்போரில் போர் விமானியானார்.

ஒருமுறை பசிபிக் கடலில் அமெரிக்கப் படை சென்றுகொண்டிருந்தபோது, எதிரி நாடுகளால் தாக்கப்பட்டது. அதிர்ஷ்டவசமாக ஹெர்பெர்ட் வக்கர் புஷ் தப்பித்து கொண்டார். ஆனால், அவரின் சக போர் வீரர்களும் நெருங்கிய நண்பர்களும் உயிரிழந்தனர். இந்தத் துயர சம்பவத்திலிருந்து மீள்வதற்கே ஹெர்பெர்ட் வக்கர் புஷ்ஷுக்கு நீண்ட காலமா னது. அதன் பிறகு, எண்ணெய் வியாபாரி அவ தாரம் எடுத்தார். அடுத்ததாக அரசியல் பிரவேசம். தூதரக அதிகாரி, உளவுத்துறை தலைவர்... இப்படி பல்வேறு துறைகளில் கால்பதித்தார்.

அமெரிக்காவின் 41 ஆவது ஜனாதிபதியாக 1988ஆம் ஆண்டு ஜோர்ஜ் ஹெர்பெர்ட் வக்கர் புஷ் பதவியேற்றார். 1993 ஆம் ஆண்டு வரை பதவியில் இருந்தார். இவரின் பதவிக் காலத்தில்தான் அமெரிக்கா ஈராக்குடன் போரிட்டது. இந்தப் போரில்தான் புதிய ரக ஏவுகணைகள் அதிக அளவில் பயன்படுத்தப்பட்டன. எனவே, ஹெர்பெர்ட் வாக்கர் புஷ்ஷின் அரசியல் வரலாற்றுப் பக்கங்களில் இந்தப் போர் அவருக்கு அவப்பெயரை உண்டாக்கியது. அவரின் ஆட்சிக் காலத்தில் வரிக் கட்டணங்களை உயர்த்தியது இவர் மீது விமர்சனங்கள் எழக் காரணமானது. பின்னர் ஆட்சிக்காலம் முடிவுக்கு வந்ததும், 1993ஆம் ஆண்டு வெள்ளை மாளிகையிலிருந்து வெளியேறினார்.

2001 இல் இவரின் மகனான ஜோர்ஜ் வக்கர் புஷ் அமெரிக்காவின் 43 ஆவது ஜனாதிபதியாகப் பதவியேற்றார். ஹெர்பெர்ட் வக்கர் புஷ் அரசியலில் இருந்து விலகினாலும் தனக்குப் பிடித்த விமான சாகசங்களை செய்து அமெரிக்க மக்கள் நினைவுகளில் இருந்து நீங்காமல் இருந்தார். குறிப்பாக அவரின் 70ஆவது, 80ஆவது, 85ஆவது மற்றும் 90ஆவது பிறந்தநாள்களின்போது ஸ்கை டைவிங் செய்து உலகையே ஆச்சர்யப்பட வைத்தார். 2011இல் அப்போதைய அதிபர் ஒபாமா, ஹெர்பெர்ட் வாக்கர் புஷ்ஷுக்கு Medal of Freedom விருது கொடுத்து கௌரவித்தார். நாட்டின் உயர்ந்த குடிமக்களுக்கு கொடுக்கப்படும் விருது அது.

பர்கின்சன் நோய் புஷ்ஷின் கலகலப்பை குறைத்தது. பொது இடங்களுக்குச் செல்வதைத் தவிர்த்தார். முதுமைக் காலத்தை தன் மனைவியுடன் கழித்தார். ஆனால், கடந்த ஏப்ரல் மாதம் புஷ்ஷின் மனைவி பார்பரா பியர்ஸ் புஷ் 92-வது வயதில் காலமானார். பார்பராவின் இறுதிச்சடங்கில் வீல் சேரில் கையில் மலர்க்கொத்துடன் இருந்த புஷ்ஷை பார்த்து அமெரிக்க மக்கள் கலங்கினர். தன் மனைவியின் சடலத்தை கண் இமைக்காமல் புஷ் பார்த்துக்கொண்டிருந்ததும் பின்னர் வெடித்து அழுததும், தன் மனைவி மீது அவர் வைத்திருந்த ஆழமான காதலை வெளிப்படுத்தியது. மனைவியின் பிரிவை தாங்க முடியாமல் போனதால்தான் என்னவோ சில மாதங்களில் புஷ்ஷும் மரணத்தைத் தழுவினார்.

வாக்கர் புஷ்ஷுக்கு 5 பிள்ளைகளும் 17 பேரன்களும் உள்ளனர். ஹளங்களின் தந்தை எச்.டபிள்யூ. புஷ் தனது 94 வயதில் காலமானார் என்பதை, ஜெப், நீல், மார்வின், டோரோ, ஜோர்ஜ் வக்கர் புஷ் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம். எங்கள் தந்தை குணநலன்களில் உயர்ந்த மனிதர். சிறந்த தந்தை' என அவரின் குடும்பத்தினர் செய்திக் குறிப்பு வெளியிட்டுள்ளனர்.

வாரப்பலன்

மேடம்

மேன்மையான வாரம். சந் தேகத்திலிருந்து விடுபடுவீர்கள். ஆன்மிக எண்ணங்கள் வலுப்படும்.சகோதரர்கள் அன்பு பாராட்டுவார்கள். விருந்துபசாரத்தில் கலந்து கொள்ளுவீர்கள். புதிய உறவு வரும். ஆரோக்கியத்தை கவனிக்க வேண்டிய வாரம்.

ரிஷபம்

தர்ம சிந்தனைகள் மேலோங்கும். புண்ணிய தல யாத்திரை செய்யக் கூடிய சந்தர்பம் உருவாகும். பிள்ளைகள் உங்கள் சொல்லுக்குக் கட்டுப்படுவர். அவர்கள் கல்வி நிலை மேலோங்கும். பணம் சேதிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள். கலையார்வம் மேலோங்கும்.

மிதுனம்

சிறுமைத் தனம் விலகும். பிறரிடம் அதிக அன்பு பாராட் டுவீர்கள். சொத்து சுகம் தரும். கலையார்வம் மேலோங்கும். கல்வி யினால் வளம் பெறுவீர்கள். மனையில் முன்னெப்பொழுதும் இல்லாதவாறு மகிழ்ச்சி நிலவும்.

கடகம்

கான மயிலாடக் கண்டி ருந்த வான்கோழி... என்றதொரு நிலையிலிப்பீர்கள். பிறரின் உயர்வு கண்டு உணர்ச்சிவசப்பட வேண்டாம். தானுண்டு தனது பணிகள் உண்டு என்று இருந்தால் தப்பித்துக் கொள்ளுவீர்கள்.

சிம்மம்

வாழ்க்கையில் பனிப்போர் ஒன்று ஆரம்பமாகலாம். வேண்டாதவர் என்ற கைவிடப் பட்டவர் வந்து உறவு கொண்டாட முயற்சிப் பர். துணைக்குப் போனாலும் பிணைக்குப் போக வேண்டாம். கடவுள் வழிபாட்டைத் தவற விட வேண்டாம்.

கன்னி

தயாள குணம்மிக்க உங்க ளுக்குச் சோதனையான காலம். வைத்த இடத்தை மறந்து திண்டாடுவீர்கள். வாகன வசதி உண்டாகும். பருவத்தே பயிர் செய்தால் பலனுண்டு. கல்வியில் மேம்படுவீர்கள். மாணவர்கள் கற்றலில் கவனமெடுக்கவும்.

துலாம்

தடைகள் பல வந்து விலகும். மேம்பாடான செய்கைகளைச் செய்வதற்கத் தாமதிக்க வேண்டாம். பெண்கள் தொடர்பால் பின்னடை வுகளைக் காண்பீர்கள். பிரச்சினைகளைக் கண்டு பயப்பட வேண்டாம். உறவுகள் கைகொடுப்பர்.

விருச்சிகம்

கனவு பலிக்கக் கூடிய காலம். சோதனைகள் பல வந்தாலும் அவை அனைத்தும் சாதனைகளே. பணச் சேமிப்பு அதிகமாகும். பொருள் பண்டச் சேர்க்கைக்கு இடம் உண்டு. உறவுகள் வலிய வந்து அன்பைச் சொரிவர்.

தனுசு

பகல்கனவு காணும் காலம். செலவு ஸ்தானத்தைக் கிரகங்கள் பார்ப்பதால் வீண் செலவு உண்டாகும். நண்பர்கள் உதவியினால் சமாளிப்பீர்கள். பிள்ளைகள் கல்வி மேலோங்கும். தெய்வ வழிபாடு மனச் சாந்தியை ஏற்படுத்தும். தர்ம சிந்தனைகளை வளர்க்க வேண்டிய காலம்.

மகரம்

தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவீர்கள். கல்வியில் சிறந்து விளங்கவீர்கள். கலை கலாசாரம் என்பனவற்றில் ஆர்வம் அதிகமாகும். பிரிந்தவர் ஒன்று சேர்வர். வேளாண்மை பலிதமாகும். வியாபாரத்தில் கலாபம் உண்டாகும். பணத்தைச் சேமிக்கக் கூடிய காலம் இது.

கும்பம்

சிறப்பான காலம். விருந்தில் கலந்து கொள்ளச் சந்தர்பம் கிட்டும். வேளாண்மையைத் தொடங்கலாம். வாகனத்தில் பயணம் செய்வதில் கவனம்தேவை. தொல் லைகள் ஏற்படலாம். புத்திமான் பலவான் என்றதுபோல் புத்தியால் அனைத்தையும் வெல்லுவீர்கள்.

மீனம்

மகிழ்ச்சி பொங்கும் வாரம். தொழில் பெருகும். தர்ம சிந்தனை ஏற்படும். பிள்ளைகள் கல்வியில் மேம்படுவர். பயணம் சிறப்புப் பெறும். வார இறுதியில் தல யாத்திரை உண்டு. மனையில் மங்கலம் பெருகும். தூரதேசத்து உறவினர்கள் வந்து போவர். நண்பர்கள் உதவுவர்.

புதுக்குடியிருப்பு - கைவேலிப் பிரதேசத்தில் அமைந்துள்ள ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைமைச் செயலகத்தில் கனடா உயர் ஸ்தானிகருக்கும் அக்கட்சியினருக்கும் இடையே சந்திப்பொன்று கடந்த வாரம் நடைபெற்றது.



2016 தொடக்கம் 2018வரை தொடர்ச்சியாக 3 தடவை தனது நாவல்களுக்கு பெயார்வே இலக்கிய விருதினை வென்ற ந.யோகேந்திரநாதன்.

அறநெறிக்கென தம்மை அர்ப்பணித்த 100அறநெறி ஆசிரியர்கள் இந்துமத அலுவல்கள் அமைச்சினால் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் கடந்த வாரம் இவ்விழா நடைபெற்றது என்றது குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி உடனடியாகப் பதவி விலக வேண்டும் என்றதை வலியுறுத்திதொழிற் சங்கங்களின் பொது அமைப்பு கோட்டை தொடருந்து நிலையத்திற்கு எதிரே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன் அது பற்றிய துண்டுப் பிரசுரத்தையும் வெளியிட்டிருந்தனர்.

கிளிநொச்சிக் கரைச்சிப் பிரதேச கலாசார விழா 2018 அண்மையில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.



மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரனின் நெறிப்படுத்தலுடன் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதுதான் எனக்கு வேண்டும்

செல்லப் பிராணிகளை விற்பனை செய்யும் கடைக்குச் சென்றான் அந்தச் சிறுவன். பல அழகிய நாய்க்குட்டிகள் அங்கே விற்பனைக்கு இருந்தன. விலை 500 ரூபாய் என்றார் கடைக் காரர். கடையின் ஒரு மூலையில் நாய்க்குட்டி ஒன்று தனியாக இருப்பதைப் பார்த்தான் அவன். "இது மட்டும் ஏன் தனியாக இருக்கிறது? இது விற்பனைக்கு இல்லையா?" என்று கேட்டான் சிறுவன். "இது உடற் குறைபாடுள்ள குட்டி. ஒரு கால் இல்லாமலேயே பிறந்தது. ஆகவே இது விற்பனைக்கு இல்லை" என்றார் கடைக் காரர். அந்தக் குட்டியைத் தூக்கி விளையாடிய சிறுவன், தனது பையில் இருந்து 500 ரூபாயை எடுத்து நீட்டினான். "இந்தக் குட்டியை வாங்கிக் கொள்கிறேன்" என்றான். "இது விற்பனைக்கு இல்லை என்று சொன்னேனே! நீ வேறு நல்ல குட்டியை வாங்கிக் கொள்ளலாமே. கால் ஊனமான இந்த நாய்க்குட்டியை ஏன் தேர்ந்தெடுத்தாய்?" என்றார் கடைக்காரர்.

சிறுவன், தான் அணிந்திருந்த கால் சட்டையின் கீழ்ப் பகுதியைத் தூக்கிக் காட்டினான். அங்கு அவனுக்கு மரத்தாலான ஒரு கால் இருந்தது. உடற் குறைபாடு உள்ள சிறுவன், தன்னைப் போலவே ஒரு கால் இல்லாமல் இருந்த நாய்க்குட்டியின் உணர்வுகளையும் துயரங்களையும் புரிந்து கொள்ளும் பெரிய மனம் படைத்திருந்தான் என்பதே இங்கு கவனிக்க வேண்டிய விடயம். மற்றவரது இடத்தில் நம்மை வைத்து, அவர்களது பிரச்சினைகளையும் துன்பங்களையும் புரிந்து கொள்ளும் மனமும் திறனும் நமக்கு வேண்டும்.

உணவைத் தவிர்க்காதீங்க!

மூன்று வேளை உணவில் ஒரு வேளை சாப்பிடாமல் இருப்பதால், உடலின் வளர்சிதை மாற்றம் குறையத் தொடங்கும். இதனால் பசி அதிகரித்து, அடுத்த வேளை உணவை இரண்டு மடங்காக உட்கொள்ளவேண்டிய சூழல் உருவாகலாம். இரண்டு வேளைக்கான உணவை ஒரே நேரத்தில் உட்கொள்வது ஆபத்தானது. சிலர் பசியைப் பொறுக்க மு டியாமல், நொறுக்குத்தீனிகளைச் சாப்பிடுவார்கள். அதுவும், தவறான பழக்கமே. சரியான நேரத்துக்கு, சரியான உணவை மட்டுமே சாப்பிட வேண்டும். இல்லையென்றால், வளர்சிதை மாற்றம் பாதிக்கப்பட்டு, உடல் பருமன் ஏற்படும். காலை உணவைக் கண்டிப்பாகத் தவிர்க்கக் கூடாது.

குறள் ஒன்று விளக்கம் இரண்டு

குறள் 77:

என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை அறம்

கலைஞர் மு.கருணாநிதி உரை:

அறம் எதுவென அறிந்தும் அதனைக் கடைப்பிடிக்காதவரை, அவரது மனச்சாட்சியே வாட்டி வதைக்கும். அது வெயிலின் வெம்மை புழுவை வாட்டுவதுபோல இருக்கும்.

மு.வரதராசனார் உரை:

எலும்பு இல்லாத உடம்போடு வாழும் புழுவை வெயில் காய்ந்து வருத்துவது போல் அன்பு இல்லாத உயிரை அறம் வருத்தும்.

தெரிந்த தலைமுடி தெரியாத தகவல்கள்

- மனிதர்களின் தலையில் சராசரியா ஒரு லட்சம் முதல் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் முடிகள் வரைக்கும் இருக்கும்.
- நல்ல ஆரோக்கியமான ஒரு தலைமுடி, சுமார் 100 கிராம் எடையைத் தாங்கும். ஒரு மனிதனின் மொத்த தலைமுடியும் சேர்ந்தால், 12 தொன் எடையைத் தாங்கும். அதாவது, இரண்டு ஆபிரிக்க யானைக்குச் சமம்.
- ஒரு மாதத்தில் சுமார் 1.25 செ.மீ. அளவுக்கு முடி வளரும். ஒரு வருடத்துக்கு 15 செ.மீ.வளரும் என்னதான் மூலிகைத் தைலம், ஷாம்பு என்று தேய்த்தாலும் அதற்கு மேல் வளராது.
- ஒரு நாளைக்கு 50 முதல் 100 முடி வரை இயற்கையாகவே உதிரும். அதனால், தலை சீவும்போது சீப்பில் முடி உதிருமென்று கவலைப்படாதீர்கள்.





அட அப்படியா?

இரட்டையர்கள்

தனியாகப் பிறந்த குழந்தைகளைக் காட்டிலும், இரட்டையர்களில் 22 வீதமானவர்கள், இடது கைப்பழக்கம் கொண்டவர்களாக இருப்பார்கள்.

250இரட்டையர்களில் ஒரேயோர் இரட்டையர் மட்டுமே ஒத்த முக அமைப்புடன் இருப்பார்கள்.

சராசரிக் குழந்தைகளை விட, இரட்டையர்கள் பிறக்கும்போது உடல் எடை சற்றுக் குறைவாகவே இருக்கும்

செயற்கை முறையில் அம்மாவாகிய 35 வயதுக்கு மேற்பட்ட தாய்மார்களுக்கே, இரட்டையர்கள் பிறப்பதற்கான வாய்ப்புகள் அதிகம்.

சின்னச் சிட்டு...

சிட்டே சிட்டே பறந்து வா
சிறகை சிறகை அடித்து வா !
கொட்டிக் கிடக்கும் மணிகளை
கொத்திக் கொத்தித் தின்ன வா !

ஆற்று நீரில் குளிக்கிறாய்
அழகாய்த் துள்ளி ஆடுகிறாய் !
சேற்று வயலில் அமர்கிறாய்
திறந்த வெளியில் திரிகிறாய் !

உன்னைப் போல பறக்கணும்
உயர உயர செல்லணும் !
என்னை அழைத்துச் சென்றிடு
ஏற்ற இடத்தைக் காட்டிடு !

பறக்கும் பத்தும் எவை?

பசி வந்தால் பத்தும் பறந்து போகும் என்று பலர் சொல்லிக் கேட்டிருப்பீர்கள். சிவாயநம என்னும் ஐந்தெழுத்து மந்திரத்தை ஓதினாலும் பத்தும் பறந்து போகும் என்பது சிவனடியார்களின் வாக்கு.

இதற்கு ஆதாரமாக அருணகிரிநாதர் எழுதிய திருப்புகழைச் சுட்டுகிறார்கள் அருளாளர்கள். திருப்புகழில் அருணகிரியார், 'ஆவியில் ஐந்தை அபரத்தே வைத்தோதில்ஆவி ஈரைந்தை அகற்றலாம்' என்கிறார்.

ஐந்தெழுத்து மந்திரமான சிவாயநம ஓதினால் ஆவி பத்தும் பறந்துவிடும் என்கின்றது திருப்புகழ். 'ஆ' என்னும் எழுத்தோடு பத்தைச் சேர்க்கும் போது, 'ஆபத்து' ஆகும். 'வி' என்னும் எழுத்துடன் பத்து சேர்க்கும் போது 'விபத்து' ஆகும். ஆபத்து உடலுக்கு வரும் துன்பத்தையும், விபத்து உயிருக்கு வரும் துன்பத்தையும் குறிக்கும்.

உடலுக்குப் பசி, நோய் போன்ற துன்பங்கள் நேர்கின்றன. உயிருக்குப் பிறப்பு, இறப்பு என்னும் துன்பங்கள் நேர்கின்றன. பிறப்பு, இறப்பு அற்ற பேரானந்தம் கிடைக்கும் என்பதே இதன் அர்த்தம்.

வெங்காய அறிவுரை

ஒருநாள் பாக்தாத்தின் பெரும் வணிகர் ஒருவர் இறைஞானி பஹ்லூலிடம் வந்தார். "அறிஞர் பெருமானே!" என்று மரியாதையுடன் அழைத்தார்.

"எனது வணிகம் பெருகி செழிக்க தாங்கள்தான் நல்ல உபதேசம் செய்ய வேண்டும்!" என்று வேண்டி நின்றார்.

"இரும்பு மற்றும் பருத்தியை கொள்முதல் செய்து விற்பனை செய்யுங்கள்!" என்றார் பஹ்லூல் அந்த வணிகரிடம்.

பஹ்லூல் சொன்னபடியே அந்த வணிகர் பெருமளவு செல்வத்தைத் தமது வணிகத்தில் முதலீடு செய்தார். இரும்பையும், பருத்தியையும் வாங்கிக் கையிருப்பில் வைத்துக் கொண்டு விற்பனை செய்ய ஆரம்பித்தார். வெகு விரைவிலேயே சரக்குகள் விற்றுத் தீர்ந்து நல்ல இலாபமும் அவருக்குக் கிடைத்தது.

மீண்டும் அந்த வணிகர் பஹ்லூலிடம் வந்தார். அலட்சியமாகப் பார்த்தார். "கிறுக்கு பஹ்லூலே! என் வணிகத்தில் எதைக் கொள்முதல் செய்தால் கொள்ளை இலாபம் சம்பாதிக்கலாம் என்று சொல்!" என்று ஆணவத்துடன் கேட்டார்.

பஹ்லூல் தமது உணர்வுகளை வெளிப்படுத்திக் கொள்ளாமல், "வெங்காயமும், தர்பூசணியும் கொள்முதல் செய்து விற்பனை செய்யுங்கள்!" என்றார் அமைதியாக.

அங்கிருந்து சென்ற அந்த வணிகர் தனது மொத்த செல்வத்தையும், வெங்காயம் மற்றும் தர்பூசணியில் கொள்முதல் செய்தார். வெகு விரைவிலேயே வெங்காயமும், தர்பூசணியும் அழுகிப்போய் துர்நாற்றமடிக்க ஆரம்பித்தது.

அந்த வணிகரின் மொத்தக் கொள்முதலும் விரயமாகி அவருக்குப் பெருத்த நஷ்டம் ஏற்பட்டது. பஹ்லூலைத் தேடிச் சென்ற வணிகர், "எனது வணிகம் செழிக்க அறிவுரை வேண்டி வந்தபோது, முதல்முறை இரும்பு மற்றும் பருத்தியையும் கொள்முதல் செய்து விற்கச் சொன்னீர்கள். நானும் அப்படியே செய்து பெருமளவு ஆதாயமும் அடைந்தேன்.

ஆனால், இரண்டாவது முறை அறிவுரை கேட்டபோது, நீங்கள் சொன்ன வெங்காயம், தர்பூசணியைக் கொள்முதல் செய்து மொத்த செல்வத்தையும் இழந்து நிற்கிறேனே நான்" என்று புலம்பலானார்.

"சகோதரரே! முதல்முறை நீங்கள் அறிவுரை வேண்டி வந்தது அறிஞர் பஹ்லூலிடம். அதற்கேற்பவே அறிவுரையும் கிடைத்தது. இலாபமும் அடைந்தீர்கள். ஆனால், இரண்டாவது முறை நீங்கள் அறிவுரை வேண்டி நின்றது, கிறுக்கனிடம்.

கிறுக்கன் பஹ்லூலிடம் கிறுக்குத்தனமான அறிவுரையன்றி வேறு எதைதான் எதிர்பார்த்தீர்கள்?" என்று அமைதியுடன் கேட்டார் பஹ்லூல். தனது மடத்தனமான நடத்தையை எண்ணி அந்த வணிகர் தலைகுனிந்தவாறே அங்கிருந்து சென்றார்.



வாக்குத் தத்தம்

ஏக இறைவனாம் யெகோவா தேவன் பூமியை ஒரு சொர்க்கலோகம் போலவே படைத்தார். அதில் முதல் மனிதனாகிய ஆதாமையும் அவனது தனிமையின் துயர் துடைக்க ஏவாளையும் படைத்தார். அவர்களுக்கு ஏதேன் எனும் தோட்டத்தில் தங்க இடம் தந்தார். அவர்கள் இருவரும் கபடமும் வெட்கமும் இல்லாத புனிதத் தன்மையுடன் வாழ்ந்தார்கள். இறைவனின் ஊழியனாகப் பணிபுரிந்த லூசிபர் எனும் தேவதூதன், அவரது ஆளுகையை ஏற்காமல் புரட்சி செய்தான்.

இதனால் உலகின் முதல் தீய சக்தியாக மாறிய அவனை மரணத்தின் நிழலாகச் சபித்தார் இறைவன். தன் வீழ்ச்சியில் பாடம் கற்றுக்கொள்ளாத லூசிபர், இறைவனைப் பழிவாங்க எண்ணி அவரது அற்புதப் படைப்பாகிய ஆதாம்- ஏவாள் இருவரையும் அழிக்க முயன்றான்.

ஏதேன் தோட்டத்தின் விலக்கப்பட்ட கனியை அவர்களை உண்ணும்படி செய்தான். இதனால் இறைவனின் கோபத்துக்கு ஆளான ஆதாம், ஏவாள் இருவரும், மீண்டும் மீண்டும் விலக்கப்பட்ட மரத்தின் கனியை உண்டு, கீழ்ப்படியாமை எனும் பாவத்தில் நிலைத்திருக்காத வண்ணம், அவர்களை ஏதேன் தோட்டத்திலிருந்து வெளியேற்றினார். அது முதல் கபடமும், வெட்கமும், அச்சமும் பெற்று இயற்கையோடு போராட்டம் மிகுந்த வாழ்வைத் தொடங்கினார்கள்.

ஏதேன் தோட்டத்தை இழந்த போது ஆதாமும் ஏவாளும் அடைந்த துக்கமும் துயரமும் கொஞ்ச நஞ்சமல்ல. என்றாலும் கடவுள் தன் படைப்பைக் கைவிட விரும்பவில்லை. கீழ்ப்படியாமையால் முதல் பாவத்தைச் செய்து, கடவுளின் கோபத்துக்கு ஆளான அவர்களை, அந்தப் பாவத்திலிருந்து விடுவித்து மீட்க. "ஓர் ஆண்மகனை அனுப்புவதாக" அவர்களுக்கு வாக்களித்தார். கிறிஸ்தவ கலாசார வாழ்வில் இதுவே 'வாக்குத் தத்தம்' என்று வருணிக்கப்படுகிறது.

புள்ளி வைத்தவர் ரவி கோலம் போட்டவர் கிட்டு

பகலவன்

கிட்டுவின் ஆளுமை - ராஜதந்திரம் பற்றிக் குறிப்பிடும் போதெல்லாம் கைதிகள் பரிமாற்றம் பற்றிச் சுட்டிக்காட்டத் தவறுவதில்லை. அந்தக் கோலத்துக்குக்கான ஆரம்ப புள்ளியை வைத்தவர் ரவி எனப்படும் விடுதலைப் புலிகளின் உத்தியோகபூர்வ பத்திரிகையின் ஆசிரியர் ஆவார். வெலிக்கடைச் சிறையில் அக்காலப்பகுதியில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இவரும் வவுனியா மாவட்டத்தில் புலிகளின் செயற்பாடுகளுக்குப் பொறுப்பாக விளங்கிய தவம் அண்ணாவும் அங்குள்ள வைத்தியசாலைக்கு மருந்து எடுக்கச் சென்றனர். அங்கு அவர்களுக்கு ஓர் இன்ப அதிர்ச்சி. வீரச்சாவடைந்து விட்டார் எனக் கருத்தப்பட்ட அருணா அங்கு சிகிச்சை பெற்றுக்கொண்டு இருந்தார். மட்டக்களப்பு மாவட்டத் தளபதியாக விளங்கியவரே அருணா. தமிழகத்திலிருந்து படகு மூலம் நாட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்த போது கடற்படையினர் இந்தப் படகை மூழ்கடித்தனர். இச்சம்பவம் 1986 ஏப்ரல் 27 நாள் நடைபெற்றது.

இச் சம்பவத்தில் கப்டன் அலெக்ஸ் (கந்தசாமி நித்தியானந்தன் - நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்), லெப். கபில் (இரா. பாலேந்திரன் திருகோணமலை), 2ம் லெப். ரங்கா (சிங்காரவடிவேல் இராசகுமார் ஊரிக்காடு, வல்வெட்டித்துறை) 2ம் லெப். துரைக்குட்டி (சிவகுருநாதன் இராசவடிவேல் - வல்வெட்டித்துறை), வீரவேங்கை நளினன் (சச்சிதானந்தன் பிரதாபன் - நவாலி, மானிப்பாய், யாழ்ப்பாணம்), வீரவேங்கை கார்த்திக் (நடராஜா கார்த்திகேசு - யாழ்ப்பாணம்), வீரவேங்கை தெய்வா (ஐயாத்துரை சிவநாதன் - மாதகல், யாழ்ப்பாணம்), வீரவேங்கை காந்தன் (சிவசுந்தரம் விஜயதாஸ் - வல்வெட்டித்துறை, யாழ்ப்பாணம்), வீரவேங்கை யேசு (பத்மநாதபிள்ளை ரவீந்திரா - முனிவைரவர் கோவிலடி, அளவெட்டி, யாழ்ப்பாணம்), வீரவேங்கை அருச்சுனா (பொன்னுத்துரை மித்திரா சின்னஉப்போடை, மட்டக்களப்பு) ஆகியோர் வீரச்சாவெய்தினர்.

நன்கு நீச்சல் தெரிந்ததால் அருணா கடலில் நீந்தினார். முதலில் அருணாவுக்கு நீச்சல் தெரியாது மட்டக்களப்புக்கு போவதற்கு முன்னர்தான் நீச்சல் பயின்றார். இதன் பின்னர் கடலில் நீண்ட நேரம் நீச்சலடிக்காது மிதக்கும் ஆற்றலைப் பெற்றிருந்தார். மூதூர் பிரதேசத்தில் இலக்கந்தை கடலில் போராளிகளோடு குளிக்கும் போது இவ்வாறு மிதந்து காட்டினார்.

படகு மூழ்கும் போது அருணா தான் மட்டுமே உயிர் தப்பியதை உணர்ந்து கொண்டார். கடற்படையினர் கயிறு எறிந்து அவரைக் காப்பாற்றினர். பின்னர் விசாரணையின்போது தனது பெயர் கோணேசன் என்பதற்குப் பதிலாக செல்வகுமார் என்றும் தான் ஒரு படகோட்டி என்றும் கூறினார். வேறு எவராவது தப்பியிருந்தால் தனித்தனியாக்கி விசாரிக்கும்போது வெவ்வேறு விவரங்களைக் கூறி சிக்கலுக்குள்ளாக்கியிருக்கக் கூடும். சிறையில் சிங்கள இனத்தைச் சேர்ந்த நிசாம் எனும் போராளியைச் சந்திக்க நேர்ந்தது. இருவரும் ஒருவருக்கொருவர் அறிமுகமில்லாதவர்கள் போல் நடந்துகொண்டனர். நிசாம் கொழும்பில் கைதாகியிருந்தார்.

1986ம் ஆண்டு கைதிகள் பரிமாற்றத்தின் போது விடுதலையான அருணா, காமினி, ஆகியோருடன் லெப் கேணல் திலீபன், கேணல் கிட்டு லெப் கேணல் பாண்டியன்.

1985 ஜனவரி 09 அன்று நடந்த அச்சுவேலி முற்றுகைக்கு நிசாம்தான் காரணம் எனப் பரவலாக நம்பப்பட்டு வந்தது. கிளிநொச்சியில் இளைஞர்களைக் விசாரித்த படையதிகாரி ஒருவர் எல்.ரீ.ரீ.ஈயைப் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும் ஏனெனில் நான்தான் நிசாம் என்று கூறிக்கொண்டு இருந்தார். நிசாமை எவருக்கும் நேரில் தெரியாதுதானே. நிசாம் படையினரின் ஊடுருவல் என நம்பப்பட்டது. சைகையினால் அருணாவும் நிசாமும் ஒருவரைப் பற்றி ஒருவர் சொல்வதில்லை என முடிவெடுத்துக் கொண்டனர்.

நிசாமைப் போலவேதான் இறுதி யுத்தத்தில் படையினரின் உளவாளி எனச் சிலரைப் பற்றி தங்கள் தங்கள் அறிவுக்கேற்ற மாதிரி பலர் கதைகளைப் பரப்பினர். (புலம்பெயர் தேசத்தவரும் இவ்வாறு தமக்குப் பிடிக்காதவர்களை கே.பியின் ஆள், றோவின் ஆள், கோத்தபாயவின் ஆள் என சகட்டுமேனிக்குக் குற்றம் சாட்டுகின்றனர். படையினரிடம் சரணடைந்தவர்கள் என்றாலே பொதுவாக இந்தப் பட்டம்தான். பட்டம் வழங்குவது யார் என்றால் ஏற்கனவே இந்தியப் படையினரிடமோ, இலங்கைப் படையினரிடமோ பிடிபட்டவர்கள் மற்றும் வாழ்க்கையில் களம் காணாதவர்கள் அத்துடன் கூலிக்கு எழுதுபவர்கள்)

ரவியிடமும் தவம் அண்ணாவிடவும் செல்வகுமார்தான் தனது பெயர் என்று சொல்லியிருக்கிறேன் என்றும் நிசாம் ஒரு அப்பாவி எனவும் விசுவாசத்தில் யாருக்கும் குறைந்தவன் அல்ல என்றும் அருணா கூறினார். அடுத்த ஒருசில நாட்களில் தன்னைப் பார்வையிட வந்த உறவினர் ஒருவரிடம் ரவி தனது மாமாவின் லொறி பற்றி நினைவூட்டினார். அதில் எழுதப்பட்டிருக்கும் பெயர் உள்ள ஆள் இங்குதான் இருக்கிறார் என்று சம்பந்தப்பட்டவர்களிடம் கூறும் படி சொன்னார். அந்த லொறியின் பெயர் 'அருணா ட்ரான்ஸ்போர்ட்" அந்தப் பார்வையாளர் உடனடியாக யாழ்ப்பாணம் போய் கிட்டுவிடம் விசயத்தைச் சொன்னார்.

அன்று பகல் ஏற்கனவே மட்டக்களப்பில் நின்ற ஒரு போராளி அருணாவின் புகைப்படம் பொறித்த துண்டுப் பிரசுரங்களைத் தபால் மூலம் மட்டக்களப்புக்கு அனுப்பும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்ததை கிட்டு கண்டிருந்தார். யாழ். பல்கலைக்கழகத்தில் பயின்று கொண்டிருந்த அம்பாறையைச் சேர்ந்த ஒரு மாணவன் மறுமலர்ச்சிக் கழகத்தின் துணையுடன் இதனை வெளியிட்டார். (மறுமலர்ச்சிக் கழகத்தின் விளம்பரப் பலகையிலும் இது ஒட்டப்பட்டிருந்தது) உடனே கிட்டு அந்தப் போராளியை அழைத்து அருணா உயிருடன் இருக்கும் விடயத்தைச் சொன்னார். 'அருணாவின் புகைப்படம் வெளிவரக்கூடாது. நீ அனுப்பிய கடிதங்கள் மட்டக்களப்புக்கு போகக்கூடாது எதையாவது செய்" என்றார். எப்படியோ யாழ்ப்பாணத்திலிருந்து தபால் கட்டுக்களில் அவை போகாத மாதிரி மீளப்பெறப்பட்டன.

சில நாட்களின் பின்னர் எதோ ஒரு வகையில் தொடர்பு கிடைத்து செல்வகுமார் என்ற பெயரில் உள்ள கைதியைப் பார்க்கவென வெலிக்கடைக்குச் சென்றார் பொன். வேணுதாஸ் என்ற சட்டத்தரணி. (அன்னை பூபதியின் உண்ணா விரத நிகழ்வுகளைக் ஒழுங்குபடுத்திய இவர் பின்னர் சிறைக்குப் போக வேண்டி ஏற்பட்டது. தொடர்ந்து இயக்க உறுப்பினர் என்ற நிலைக்கும் செல்ல காலம் பணித்தது. 11.12.1991 அன்று படையினர் மேற்கொண்ட தாக்குதலில் மேஜர் வேணுவாக வீரச்சாவெய்தினார்) அருணாவின் விடயமாக ஒரு முக்கிய உறுப்பினர் மட்டக்களப்பிலிருந்து யாழ்ப்பாணம் சென்றார்.

12.10.1986. அன்று அடம்பனில் படையினர் மேற்கொண்ட முற்றுகையைத் தளபதி விக்ரர் தலைமையில் பானு மற்றும் பெண் போராளிகள் அணி எதிர்கொண்டனர்.



'விடுதலைப் புலிகள்' பத்திரிகையின் ஆசிரியர் ரவி

இதில் லெப்.கேணல் விக்ரரும் 2 ஆம் லெப். ரோமும் வீரச்சாவெய்தினர். மகளிர் படையணியை முதலில் களமிறங்கியது விக்ரரே. இந்தக் களம் அடம்பன் என தவறுதலாகக் குறிப்பிடப்படுகிறது. மன்னார் தீவுப்பகுதியை சில நாட்கள் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்காக நடத்திய சமரிலேயே மகளிர் படை முதன் முதலாக களமிறங்கியது. சண்டை அனுபவம் ஒன்று தேவை என்பதற்காக மன்னார் நகரத்துக்குள் மகளிரை அனுப்பினார் விக்ரர். அந்த அனுபவம் அடம்பன் முற்றுகைக்குக் கைகொடுத்தது. பல படையினர் கொல்லப்பட்டனர். சில படையினரின் சடலங்கள் கைப்பற்றப்பட்டன. இரு படையினர் உயிருடன் பிடிப்பட்டனர். கைப்பற்றப்பட்ட படையினரின் சடலங்களை யாழ். கோட்டை முகாம் வாசல் வரை கொண்டு சென்று கையளித்தார் ரஹீம் என்ற போராளி.

தொடர்ந்து ஸ்ரீலங்கா மக்கள் கட்சித் தலைவர் விஜய குமாரதுங்காவுடன் தொடர்பை ஏற்படுத்தி படையினர் இருவரையும் கையளிப்பதாயின் அரசின் வசம் கைதிகளாக உள்ள புலிகள் இயக்க உறுப்பினர்கள் இருவரை விடுவிக்க வேண்டுமென கிட்டு சார்பில் தெரிவிக்கப்பட்டது. சென்னை விமான நிலையத்தில் விஜய குமாரதுங்கவும் அவரது மனைவி சந்திரிகாவும் தற்செயலாக புலிகளின் தலைவர் வே.பிரபாகரனை முன்னர் சந்தித்திருந்தனர். எனவே இந்த விடயத்தைக் கையாள விஜய குமாரதுங்கா விரும்பினார். அரசு தரப்புடன் அவர் பேச்சுக்களை மேற்கொண்டார். யாழ்.கோட்டை முகாம் கப்டன் கொத்தலாவல இம்முயற்சியில் தீவிர அக்கறை காட்டினார்.

படையினர் - புலிகள் சந்திப்பென்றாலும் இரு பகுதியினரும் புலனாய்வு நடவடிக்கைகளில் ஒருவருக்கொருவர் சளைத்தவர்களல்ல என்பதை நிரூபித்தனர். விஜய குமாரதுங்கவுடன் வந்த படப்பிடிப்பாளர் ஒருவரை இவர் புலனாய்வு அதிகாரி என இனங்கண்டு அவரது பெயரையும் குறிப்பிட்டனர் புலிகள். அவரை அங்கேயே நிற்க விட்டு ஏனையோரை அழைத்துச் சென்றனர். கப்டன் கொத்தலாவல முக்கிய புலி உறுப்பினர்களை யாரும் அவருக்கு அறிமுகப்படுத்த முன்னரே 'ஆ... ரவி, ஆ... கேடி" என விசாரித்துக் கைகுலுக்கினார்.

பேச்சுகளின்போது விடுவிக்கப்பட வேண்டிய தமது உறுப்பினர்களின் பெயர்களில் காமினி என்பவரை முதலாவதாகக் குறிப்பிட்டனர் புலிகள். அடுத்தவர் செல்வகுமார் என்றனர். என்ன முக்கியத்துவம் இவர்களுக்கு என கொத்தலாவல அறிய முயன்றார் 'காமினி ஒரு சிங்களவராக இருந்து கொண்டு எமது போராட்டத்தில் இணைந்தவர். செல்வகுமார் ஒரு படகோட்டி. எமது நடவடிக்கைகளுக்கு படகோட்டிகளின் பங்கு முக்கியமானது. தங்களுக்கு நாங்கள் முக்கியத்துவம் கொடுக்கிறோம் என அவர்கள் உணர வேண்டும். அதற்காகவே செல்வகுமார் விடுவிக்கப்படவேண்டும்" எனக் குறிப்பிட்டார் கிட்டு. எவ்வாறாகினும் எமக்கு காமினியின் விடுதலை முக்கியம் என அடிக்கடி வலியுறுத்தினார். இதன் மூலம் செல்வகுமார் பக்கம் (அருணா) மீது அவர்களின் கவனம் திரும்பாமல் பார்த்துக்கொண்டார்.

படையினர் இருவரது பெற்றோரிடமும் நாங்கள் நிச்சயமாக இவர்களைக் கொல்லமாட்டோம் என வாக்குறுதியளித்தார். உலகத்துக்கு (குறிப்பாக சிங்கள மக்களுக்கு) விடுத்தசெய்தியில் 'இந்த அரசு தனது படையினர் குறித்து எந்தளவு அக்கறையுடன் உள்ளது என்பதைச் சிங்கள மக்கள் புரிவதற்கு இது ஒரு சந்தர்ப்பம்" என்றார். இந்தச் செய்தி சிங்கள மக்கள் மத்தியில் பரவியது. அரசுக்கு அழுத்தங்கள் கூடின. இரு நாடுகளுக்கு இடையில்தான் போர்க் கைதிகள் பரிமாற்றம் நடைபெற முடியும் என விடாப் பிடியாக நின்ற அரசு தனது நிலைப்பாட்டை மாற்ற நேர்ந்தது.

இறுதியில் பலாலி முகாமிலிருந்து காமினியும், அருணாவும் விடுவிக்கப்பட்டனர். யாழ். கோட்டை முகாமுக்கு இரு படையினரையும் அனுப்பிவைத்தனர் புலிகள். அன்று செய்தியாளருக்கு கருத்துத் தெரிவித்த தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி 'விடுவிக்கப்பட்ட புலிகள் முக்கியமானவர்களல்ல. குறிப்பாக காமினி மிக விரைவில் விடுதலையாக விருந்தார் (தண்டனைக்காலம் முடிந்து), அடுத்தவர் குமார், அவர் ஒரு படகோட்டி" எனக் குறிப்பிட்டார்.

'இந்தக் கைதிகள் விடுவிப்பு மூலம் இலங்கைத் தீவில் இரு நாடுகள் உள்ளன என்பதை அரசு ஒப்புக்கொண்டுள்ளது." எனக் குறிப்பிட்டார் கிட்டு அருணா விடுதலையான செய்தி காட்டுத் தீ போல் பரவியது. யாழ். பல்கலைக்கழக மறுமலர்ச்சிகழக விளம்பர பலகையில் அருணாவுக்கு அஞ்சலி செலுத்தி ஒட்டப்பட்டிருந்த துண்டுப் பிரசுரத்தின் தலைப்பில் 'மீண்டும் எம்மிடம் எப்போ...?" எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. அதற்கு கீழ் அருணா விடுதலையான நாளை எழுதி விட்டிருந்தார் ஒரு குறும்பர்.

அடுத்த நாள் கிட்டுவுக்கு தொலைபேசி அழைப்பெடுத்த கப்டன் கொத்தலாவல 'அருணா சுகமாக இருக்கிறாரா?" எனக் கேட்டார். சிரித்துக்கொண்டே மழுப்பினார் கிட்டு. இந்தக் கைதிகள் பரிமாற்றம் என்பது கிட்டுவின் ராஜதந்திரம், ஆளுமையை உலகுக்கு வெளிக்காட்டியது. புலிகள் இயக்கத்தின் கட்டமைப்புக்கு கிடைத்த வெற்றி எனவும் கூறலாம். பேரத்துக்கு உட்படுபவர் அருணாதான் என்ற விடயம் மிக மிக இரகசியமாக இருந்தது.

இன்று கைதிகள் பரிமாற்றத்தில் வெளிவந்த அருணாவோ, காமினியோ, படைத்தரப்பின் அஜித்தோ உயிரோடு இல்லை. அருணாவின் இழப்பு யாழ். குருநகரில் இடம்பெற்றது. காமினி 4.5.1987 அன்று வந்தாறுமூலை மடடக்களப்பில் நடைபெற்ற நேரடி மோதலில் வீரச்சாவு. அஜீத் வெலிக்கந்தைப் பகுதியில் இராணுவ அணிக்கு தலைமை தாங்கிச் சென்ற போது 27.10.1991 அன்று புலிகளின் தாக்குதலில் கொல்லப்பட்டார். அவருக்கு மேஜர் நிலையை வழங்கியது அரசு. இவர் புலிகளின் தடுப்பில் இருந்தபோது இவரது பிறந்தநாளை அறிந்த கிட்டு தங்கச் சங்கிலியொன்றைப் பரிசாக வழங்கினார். விடுதலையான பின் படையினரால் கைதுசெய்யப்பட்ட புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவரை தான் பராமரிக்க வேண்டும் என்ற தனது விருப்பதை வெளியிட்டார். அவரது வாழ்நாளில் அது கைகூடாமலேயே போயிற்று. மற்றைய சிப்பாய் பற்றிய விவரம் தெரியவில்லை.

இந்த நடவடிக்கையை நெறிப்படுத்திய கேணல் கிட்டு மற்றும் கப்டன் கொத்தலாவல, விஜய குமாரதுங்க, லலித் அத்துலத் முதலி ஆகியோரும் இன்று உயிருடன் இல்லை

• • •

இன்றைய நிலையை எண்ணிப் பாருங்கள் போராட்டத்தின் விறாந்தையில் நிற்காதவர்கள்கூட வரலாறு சொல்கிறார்கள். யார் துரோகி எனத் தீர்மானிக்கிறார்கள். பண்டிதர், அல்பேட் ஆகியோருடன் விடுதலைப் பணியாற்றி கிட்டதட்ட மூன்று தசாப்தங்கள் போராட்டப் பங்களிப்பு வரலாற்றைக் கொண்டவர் ரவி. இவரை விடுதலைப் புலிகள் பத்திரிகையின் ஆசிரியராக நியமித்தனர் தலைவர் பிரபாகரன். இவருக்கு சவால் விடுகின்றனர். புலிகளின் கட்டமைப்புப் பற்றி புது விளக்கமளிக்கின்றனர். இன்று வரலாறு பலராலும் திரிக்கப்படுகிறது.

பொட்டு என்ற பெயர் ஏன் வந்தது என்று தெரியாமலே வாகனத்தில் தேங்காய் வியாபாரம் செய்துவந்த சீலனுக்கும் அப்பையா அண்ணருக்கும் அறிமுகமானார் இவர் என்கிறார்கள் ஒரு சிலர். ஒரு போராளியென்றால் அந்தப் பிரிவு சம்பந்தப்பட்ட விடயங்கள் மட்டுமே அவருக்கு தெரியவரும். புலனாய்வுத்துறை , அரசியற்துறை, நிதித்துறை, தலைமைச்செயலகம், படையணிகள் எல்லாவற்றுக்குள்ளும் நடந்தது தமக்குத் தெரியும் என்றால் இதில் கற்பனை கலக்காமல் இருக்க முடியுமா?

புலிகளின் ஆரம்பகால வரலாறு, கட்டமைப்பு, இரகசியத் தன்மை போன்றவற்றைத் தெரிந்த எவரும் வரலாறு திரிபுபடுத்தப்படுவதற்கு துணைபோகமாட்டார்கள். இரகசியம் காத்தலின் வெற்றியே கைதிகள் பரிமாற்றம். இதற்கு புள்ளி வைத்ததவர் ரவி. கோலம்போட்டவர் கிட்டு என்பதை மீண்டும் நினைவூட்டுகிறோம்.

•

கிட்டுவுடன் மேஜர் ஆனந்த வீரசேகர , கப்டன் லலித் கொத்தலாவல

வேலிப் பொட்டு

■ செங்கை ஆழியான்

காரைநகரில் பஸ்சிலிருந்து இறங்கிய என்னை நண்பன் சுரேந்திரன் எதிர்கொண்டு வரவேற்றான். இளம் வயதில் கல்லூரியில் ஒன்றாகப் படித்தவர்கள் நாங்கள். யாழ்ப்பாணத்தில் தபால் அதிபராகக் கடமையாற்றி வந்தான். அந்தக் காலத்தில் 'போஸ்ரல் கிளறிக்கல்' புறம்பான ஒரு பரீட்சை தபால் திணைக்களச் சேவைக்கென இருந்தது. அப்பரீட்சையில் சித்தியடைந்து பணியை ஏற்றதால் எங்களுடன் திறமையாகக் கல்வி கற்ற சுரேந்திரன், கனகலிங்கம், மார்க்கண்டு ஆகிய மூவரையும் இலங்கைப் பல்கலைக்கழகம் இழந்தது.

ஜெனரல் கிளறிக்கலில் சித்தியடைந்ததால் வைத்திலிங்கம் என்றொரு திறமைசாலியையும் அது இழக்க நேர்ந்தது. இந்தக் காலம் மாதிரி பல்கலைக்கழகத்தையும் ஏமாற்றி அங்கு உள்வாரி மாணவராக கல்வி கற்றபடி, உத்தியோகம் பார்க்கிற திணைக்களத்தையும் ஏமாற்றி சம்பளத்தோடு பட்டம் பெறும் வாய்ப்பு அன்றிருக்கவில்லை. இருந்திருந்தால் முன் குறித்த நால்வரும் பட்டதாரிகளாக இருந்திருப்பார்கள்.

சுரேந்திரன் என்னைப் பார்த்துச் சிரித்தான். "போவம் வா" என்றபடி இறங்கிய இடத்தில் வீதியோரம் இருந்த ஒரு படலையைத் திறந்து உள் சென்றான்.

'இதுதுதான் உன்ர வீடாடா?"

'இல்லையடா . கனதூரம் போகவேணும். வளவுகளுக்குள்ளால பொட்டுகளூடாகப் போனால் கிட்ட."

நான் தொடர்ந்தேன். நாங்கள் முதலில் நுழைந்த வளவுக்காரர் எங்களை ஏறிட்டுப் பார்த்துவிட்டுத் தம் வேலைகளில் ஈடுபட்டனர். முற்றத்து நாய் தலையை உயர்த்திப் பார்த்துவிட்டு மறுபக்கம் திரும்பிக்கொண்டது. அந்தக் காணியின் அடிவளவை நோக்கி சுரேந்திரன் நடந்தான். வேலியில் ஒருவர் குனிந்து நுழைந்து அப்பால் வெளிப்படக்கூடிய அளவிற்கு ஒரு பொட்டு இருந்தது. அதனூடாக இருவரும் புகுந்தோம்.

கிணற்றடியில் நடுத்தர வயதான பெண் குறுக்குக்கட்டுடன் குளித்துக்கொண்டிருந்தாள். அவள் எங்களைப் பார்த்து பதற்றமடையவில்லை.

'என்ன தம்பி இண்டைக்கு வேலையில்லையே?"

"இண்டைக்கு ஞாயிற்றுக் கிழமை அக்கா. விடுமுறை"

"ஓமோம். உதார் புதாள்?"

"இவன் என்ர பிரெண்ட் அக்கா யாழ்ப்பாணத்திலிருந்து வந்திருக்கிறான்."

நாங்கள் இவ்வாறு வளவுகளுக்கூடாக வேலிகளில் காணப்பட்ட பொட்டுகள், கண்டாயங்கள் என்பவற்றின் ஊடாகப் பயணப்பட்டு சுரேந்திரன் வீட்டு வளவிற்குள் புகுந்தோம். பொட்டுகளை இணைத்து ஒற்றையடி வழித்தடமே உருவாகியிருந்தது.

'றோட்டால வாறதெண்டால் ஒரு மணி பிடிக்கும், பத்து நிமிசத்தில் இப்ப வந்திட்டம்." சுரேந்திரன் சிரித்தபடி.

'"முன்னர் யாழ்ப்பாணத்திலும் இப்படியான பொட்டுக்கள் இருந்தன, எங்கட சமூகம் எப்படி அன்னியோன்யமான உறவுகளைப் பேணின என்பதற்குப் பொட்டுகள் நல்ல உதாரணம். என்னுடைய அக்காமார் தங்கட சொந்தக்கார வீடுகளுக்கு றோட்டுகளால ஒழுங்கைகளால போனதில்லை. ஒரு பொட்டால புகுந்து ஊரையே சுற்றி வந்திருக்கினம். இப்ப காலம் மாறிப்போச்சுது. உறவுகளின் பிடிமானம் அற்றுப் போய்விட்டது. பொட்டுகள் அடைத்து மூடப்பட்டுவிட்டன." என்றேன் கவலையோடு.

எனக்குத் தெரியத்தக்கதாக எனது ஊரில் பொட்டுக்கள் பல இணைப்புக்களாக விளங்கியுள்ளன. வீதியில் ஏறாமலேயே எங்கும் போய் வர முடிந்தது. நான் பத்தாம் வகுப்புப் படிக்கும் வரை எங்கள் வீட்டிற்கும் பக்கத்து அம்மான் வீட்டிற்கும் இடையில் முதலில் ஒரு பொட்டும் பின்னர் அது பெரியதொரு கண்டாயமாகவும் இருந்தது. அம்மான் மகளைக் கட்டிக் கொள்ள என் அண்ணன் மறுத்ததால் இரு குடும்பங்களுக்கும் சச்சரவு கிளம்பிப் பின்னர் பெரும் சண்டையாகிவிட எங்கள் ஐயா ஒருநாள் எவர் தடுத்தும் கேட்காமல் பொட்டைக் கிடுகு வைத்து மறித்தடைத்து விட்டார். அப்படி அடைத்தும் வடக்குப் பக்க சின்னம்மா வளவுப் பொட்டூடாக அம்மாவுக்கும் மாமிக்கும் இடையில் பேச்சு வாக்கு கொடுக்கல் வாங்கல் இருந்ததை அம்மானும் ஐயாவும் பல வருடங்களாக அறிந்திருக்கவில்லை.

பொட்டு அடைபட்டு இரு குடும்பங்களும் பிரிந்ததும் எங்கள் அம்மம்மா தனித்திருந்து அழுது புலம்பியது எனக்கு இன்னமும் நினைவிருக்கு.

'அழாதை ஆச்சி. நான் உன்னை மாமி வீட்டிற்கு றோட்டால அழைச்சுப் போறன்" என்று எவ்வளவு நான் எடுத்துக் கூறியும் அம்மம்மா சமாதானப்படவில்லை.

'உறவுகள் அறுந்தால்தான் யாழ்ப்பாணத்தான் பொட்டுகளை அடைப்பான். உனக்கு அது எங்க தெரியப் போகுது. நீ சின்னப்பிள்ளை. உன் கொம்மாவை உன் கொப்பர் பெண் பாத்தது எப்படித் தெரியுமே?"

'எப்படி?'

"தரகர் கந்தையா வீட்டிற்கு ஊர்ப் பொம்பிளைப் பிள்ளையள் பின்னேரங்களில் தாயம் போட்டு விளையாடப் போவது வழக்கம் அது பெரிய வளவு எட்டுக்கோடு விளையாட ஊர்ப் பிள்ளைகள் வரும். ஐயனார் கோவிலடிப் பிள்ளையளும் வருவினமெண்டால் பாரன்."

"அதெப்படி ஆச்சி? நடுவில தார்றோட்டு.'

"தங்கட வீடுகளில் இருந்து வருவினம். பொட்டுகளால் வந்து றோட்டடியில் அங்கால இங்கால பாத்திட்டு கண்ணில எத்துப்பட்ட வளவுப் படலையைத் திறந்து புகுந்திடுவினம். பிறகென்ன...? ஆ என்ன சொன்னன். கொம்மாவைக் கொப்பர் பெண் பாத்த கதை. தாயம் போட கொம்மா கந்தையா வீட்டிற்குப் போக... அங்க கொப்பரைத் தரகர் அழைச்சு வைத்திருந்தார்.

'உந்தச் சிவப்பிதான் ஆள்' என்று காட்டியிருக்கிறார். கொம்மாவுக்கு அசுமாத்தா விசயம் விளங்கிப் போச்சுது. பொட்டுகளால புகுந்து ஓடி வந்திட்டா. முகமெல்லாம் வியர்த்து ஒழுகுது. பேச முடியவில்லை.

"பிறகு?"

'பிறகென்ன.. உன்ர கோத்தை பின்னேரங்களில் பொட்டுகளூடாகப் போறதும் உன்ர கொப்பர் ஏதாவது சாட்டோட கந்தையர் வீட்டிற்கு வாறதும்... ரெண்டு பேருக்கும் கட்டி வைச்சம்..."

"இந்தப் பொட்டுகளுக்குப் பின்னால பெரிய கதையள் இருக்குது அம்மா..." என்று நான் அம்மாவிடம் ஒருநாள் கேட்டேன்.

"அம்மம்மாவுக்கு என்ன வேலை. இதுகளை உங்களுக்குச் சொல்லுறதுகளை விட...", என்று அம்மா வெட்கப்பட்டார்.

ஆச்சிக்கு அம்மான் வீட்டுடனான தொடர்பு பொட்டு அடைபட்டதால் துண்டிக்கப்பட்டுப் போனதில் மிகுந்த கவலை.

"இவங்கள் ஒவ்வொருத்தனும் பிடிச்சுராவிகள். விட்டுக்கொடுக்க மாட்டான்கள். அடைச்ச பொட்டை ஒரு நாளைக்கு உன்ர அம்மான் பிய்த்தெறிவான் பார்..."

'எப்ப?"

"நான் மண்டையைப் போடுற அண்டைக்கு" என ஆச்சி திடமாகக் கூறியபடி ஒப்பாரியைக் கேட்ட அம்மான் பொட்டைப் பிய்த்தெறிந்தபடி ஓடி வந்தார். பிரிக்கப்பட்ட பொட்டு பின்னர் வெகுகாலமாக அடைபடவில்லை. மச்சாளைக் கட்டிய கொழும்புக்காரன் அறுக்கையில்லை' என்று மதில் கட்டியபோதுதான் உறவோடு அடைபட்டது.

"என்னடா பேசாமல் இருக்கிறாய்?" என்று கேட்டான் சுரேந்திரன்.

"இந்தப் பொட்டுகளை எண்ணிக்கொண்டன்."

"மெய்யா யாழ்ப்பாணத்திற்கென இருக்கின்ற குறிகாட்டிகளில் - ஐடன்டிட்டியில் இந்தப் பொட்டுகளும் முக்கியமானவை. எங்கட சமூக உறவின் நெருக்கத்தை அவை பிரதிபலித்தன. ரவுண் பக்கங்களில் இவை அருகிவிட்டாலும் கிராமப்புறங்களில் அரிதாக இருக்கின்றது. முன்னர்போல அதிக வளவுகளை இணைக்கா விட்டாலும் ஒன்றிரண்டு வளவுகளையாவது இணைக்கின்றன. இந்தப் பொட்டுகள் பற்றி பல சங்கதிகள் ஊரில இருக்குது."

'எங்கட ஊரில ஆடுகால் மணியத்தார் பொட்டுப் புகுந்ததால் பட்ட கதை ஒன்றுண்டு."

'சொல்லடா..'

"ஆடுகால் மணியத்தாருக்கு ஊரில் ஒரு தொடுப்பு இருந்தது. அவற்றை வீட்டிலிருந்து ஏழாவது வீடு... நடுச்சாமத்தில மனிசன் பொட்டுகளால அங்க போய் வருவார். மணியத்தாரின்ர மனிசி தன் தமையனிடம் இதைச் சொல்லி அழுதாள். அந்தப் பாவிமனிசனைத் தடுக்க முடியவில்லை.

(18ஆம் பக்கம் பார்க்க)

அசத்தும் தையல் ஓவியர்

பொதுவாக தையல் வேலைகளில் சிறந்தவர்கள் பெண்கள் என்பதாலோ தெரியவில்லை, பெண்களைத் தையல் என்றும் அழைக்கிறார்கள். ஆனால் அருண் குமார் பஜாஜ் என்பவர் தையல் ஓவியங்களால் பார்ப்போரை அசத்தி வருகிறார்.

தையல் இயந்திரத்தால் இவர்(தைத்து) வரைந்து தள்ளும் ஓவியங்கள் நம்மைப் பிரமிக்க வைக்கின்றன. தையல் தொழிலை செய்து குடும்பத்தைக் காப்பாற்றிய தந்தையின் மரணத்தால், இவர் படிப்பைக் கைவிட வேண்டியதாயிற்று. வருமானத்துக்காக தந்தையின் தொழிலையே செய்தாலும், இவருக்குள் இருந்த ஓவியர் மறைந்து விடவில்லை. கைகளால் வரைய வேண்டியவை ஊசியிலும்நூலிலும் வெளிவந்தன. உலகிலுள்ள ஒரேயொரு தையல் இயந்திர ஓவியர் இவரேதான்!

இன்று 35வயதைத் தொட்டுவிட்ட இவர். 12 வயதிலிருந்து தைத்துக் கொண்டிருக்கிறாராம். வெறும் தையல்காரராக இருந்து விடாமல், பெயரெடுக்க வேண்டும் என்ற வெறியில், 'இன்று நான் வித்தியாசமான ஓவியனாகி விட்டேன்" என்கிறார் பெருமையுடன். 'ஊசி மனிதன்" என்று செல்லமாக அழைக்கப்படுகிறார். இதுவரையில் தைத்த ஓவியங்களில், கிருஷ்ண பரமாத்மாவின் தையல் ஓவியத்தை முடிக்க 3 வருடங்கள் செலவிட்டாராம். சுமாராக 28,39,000 மீற்றர் தையல் நூலை உபயோகித்துள்ளாராம். 2000 மனித உருவங்களுடன் கூடிய சீக்கிய மகாராஜா ஒருவரின் அரண்மனை ஓவியம் இவரது இன்னொரு விசேடம்!

அற்புதமான மனித வளம் என்பது ஆண்டவனின் அதிசயக் கொடை

டிராகன் படகும் சாதனையும்



தென் கிழக்கு ஆசிய நாடுகளில் டிராகன் என்பது மிகத் தொன்மையான பாதுகாவலனாக போற்றப்படுகின்றது. புதையலைப் பாதுகாப்பதாகவும், மனிதர்களையும் பாதுகாத்து வருவதாகவும் இவர்கள் நம்புகிறார்கள். இந்த டிராகன் வடிவத்தில் பட்டத்தைப் பறக்க விடுவார்கள். படகுகளும் செய்யப்படுவதுண்டு. களியாட்ட விழாக்களில் டிராகன்களைப் போன்ற தோற்றத்துடன் வருபவர்களும் உண்டு.

வருடாவருடம் டிராகன் படகுகளை நிர்மாணித்து, போட்டிகள் இடம்பெறுவது வழமை. இந்தத் தடவை 87.8 மீற்றர் நீளமான டிராகன் படகை நிர்மாணித்து, சீனாவின் சாதனையை முறியடித்துள்ளது கம்போடியா. 2016இல் சீனாவின் 77.8 மீற்றர் நீளமான டிராகன் படகுதான் இதுவரை சாதனையாக இருந்து வந்தது. கம்போடியாவில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் அந்த நாடு கின்னஸ் சாதனை படைத்துள்ளது.

இப்படகில் ஒரே தடவையில் 179 பயணிகளை ஏற்ற முடியும். கடந்த ஏப்ரலில் ஆரம்பித்த கட்டுமானப் பணியை இப்போதுதான் முடித்தார்கள். இதுவரை சாதனை நீளமாக இருந்த சீனாவின் டிராகன் படகில் 168 பேரை மாத்திரமே ஏற்ற முடியும். "இப்படி ஒரு படகை நிர்மாணிப்பது இலேசுப்பட்ட விடயடல்ல" என்று கூறி வியந்திருக்கிறார் வியட்நாமின் உள்துறை அமைச்சர். இதைச் செய்து முடிக்க சுமாராக 7 மாத காலமும், 60,000 டொலரும் தேவைப்பட்டன.

வல்லவனுக்கு வல்லவன் வையத்தில் உண்டுதானே...!

அருகிவரும் காட்டு மிருகங்கள்



விரிந்துகொண்டே செல்லும் மனிதத் தேவைகளால், அருகி வருகின்றன காட்டு விலங்குகள் என்கிறார்கள். உண்மைதான் மனிதனின் மிருகப் பசிக்கு, அநியாயமாக காட்டு மிருகங்கள் காவு கொடுக்கப்படுகின்றன என்பதே நிஜம்.

1970 இலிருந்து 2014க்கு இடையிலான காலகட்டத்தில், 60 வீதமான முதுகெலும்புள்ள பட்சிகள், மீன்கள், நீர் வாழ் உயிரினங்கள், பாலூட்டிகள், ஊர்வன அழிக்கப்பட்டு விட்டன எனக் கூறப்படுவது, நமக்கு அதிர்ச்சி தரும் தகவல்தான். உலகில் 4000 இனங்கள் பரவலாக கணிப்புக்கு உட்படுத்தப்பட்டே, இந்தத் திடுக்கிடும் புள்ளி விபரங்கள் கிடைத்துள்ளன.

நன்னீர் வாழ் உயிரினங்களின் புள்ளி விபரம் இன்னும் மோசமாக இருக்கின்றது. 44 வருடங்களில் 89 வீதமான உயிரினங்கள் அழிந்து விட்டன என இவர்கள் சுட்டிக் காட்டுகின்றார்கள். இலத்தீன் அமெரிக்காவின் காடுகள்தான் மிக மோசமான பாதிப்பை எதிர்கொண்டுள்ளது.

என்ன பாவம் செய்தன இந்த உயிரினங்கள்?

சீனா பறக்க நீங்க ரெடியா...?

தூர் பறக்க அடிக்க வேண்டிய இடத்தில்அடிக்காமல், தேவையற்ற இடத்தில் தூள் பறக்கச் செய்கிறார்கள். சமாதானத்தை தள்ளாட விட்டுவிட்டு, மறுபக்கம் சமாதானத்தைப் பறக்க விடப் போகிறார்களாம். எந்தளவுக்கு இது வெற்றியளிக்கப் போகின்றது?

அடுத்த வருடச் சுதந்திர தினமான பெப்ரவரி 14 இலங்கையில் முதற்தடவையாக, Peace Air என்ற பெயரில் தனியார் விமானச் சேவை நிறுவனமொன்றை ஆரம்பிக்கப் போகிறார்களாம். சீனாவின் ஐந்து வெவ்வேறு நகரங்கள் நோக்கிய இடை நிறுத்தமிலலாத பயணம் தினமும் கொழும்பிலிருந்து ஆரம்பிக்கும் என்கிறார்கள். இதை விட மேலும் நான்கு சீன நகரங்கள் நோக்கிய பயணங்களும் உண்டு.

சீனாவின் பயண முகவர்கள் இந்தச் சேவை பற்றி அவர்கள் மண்ணில் போதுமானளவு விளம்பரங்கள் செய்ய ஏற்பாடுகள் நடக்கின்றன என்கிறார்கள் இந்தப் புதிய நிறுவன அதிகாரிகள். இது சீன நிறுவனமா அல்லது இலங்கை நிறுவனமா? 265 பயணிகளை ஏற்றக்கூடிய புத்தம்புதிய போயிங் 747 ஒன்று வாங்கப்பட்டுள்ளது. விரைவில் போயிங் 787 ரக விமானமும் வாங்கப்பட இருக்கின்றது.

மேலதிகமாக எட்டு விமானங்கள் கொள்வனவு செய்யத் திட்டமாம்!

இலங்கையில் அகலக்கால் பதிக்கிறது சீனா...!

தாராளவாதம் - சூழலியல் எப்போதும் முரண் ஏன்...?

1990களுக்கு முன் அரிதாகவும் ஆச்சரியமாகவும் கேட்ட ஒரு வார்த்தை. இன்று அதுவே உலகின் வாழ்வாகிப் போனது. 'உலக மயமாக்கல்" நாளுக்கு நாள் சக்திவாய்ந்ததாக மாறிக்கொண் டிருக்கிறது.

இந்த சர்வதேச பொருளா தார வியூகத்தில் பின்விளைவு களும் இருக்கின்றன. அது அனை வராலும் உணரப்படாமலும், புரிந்துகொள்ளப்படாமலுமே இருந்தன. இந்தப் பின்விளைவுகள் எதுவும் நேரடியானதில்லை, மறைமுகமானது. அவை உடனடியாகத் தெரிவதில்லை. தெரியவுமில்லை.

பொருளாதார உலகமயமாக் கலின் எதிர்காலம் அவ்வளவு பிரகாசமானதாக இருக்கப் போவதில்லை. அது தொடர்ச்சி யான அரசியல் நெருக்கடிகளால் தகர்த்தெறியப்படும். மிகப்பெரிய வர்த்தக சந்தையை உருவாக்கித் தரும் ஐரோப்பிய யூனியன் குழுவிலிருந்து பிரிட்டன் வெளி யேறியது. அமெரிக்காவின் உலக வர்த்தகத்தை விட அமெரிக் கர்களே முக்கியமென்று நினைத்த ட்ரம்ப் வெற்றிபெற்றது. பிரான்ஸிலும் ஜேர்மனியிலும் தேர்தலின்போது உலகமயமாக் கக் கொள்கைகளை எதிர்ப்பவர் களுக்குக் கிடைத்த ஆதரவு போன்ற உலக அரசியல் நிகழ்வுகள் உலகமயமாக்கலின் ஆபத்தான விளைவுகளை அவர்கள் புரிந்து கொண்டார்களோ என்ற சந்தேகத்தைக் கிளப்புகிறது.

'நாம் முன்னெடுத்த கொள்கை பல நஷ்டங்களைக் கொடுத்து விட்டது. அதையெல்லாம் சரி செய்ய இப்போதிருக்கும் திட்டங்களும், முன்னெடுப்புகளும் எந்த அளவுக்கு உதவுமென்று எனக்குப் புரியவில்லை. இது உண்மையை எதிர்கொள்ள வேண்டிய நேரம். நமது கொள்கை தோற்றுவிட்டது. அதை நாம் ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும்." உலகமயமாக்கல் பல விஷயங்களை உள்ளடக்கியது. இதில் முக்கியமானது, நாடுகளுக் கிடையிலான எளிய வணிகத்தைச் சாத்தியமாக்குவது. 'நாம்" அதைச் சொல்லி என்னவெல்லாம் செய்துள்ளோமோ, அவற்றைச் சரிசெய்து மீட்டுக் கொண்டு வருவது மொத்த மனித இனத்துக் குமே மிகப்பெரிய சவால்.

உலகின் அத்தனை மனிதர்களுக் குமே அடிப்படை உரிமைகள் உள்ளன. அந்த உரிமைகள் சிலரிடம் மட்டுமே தேங்கிக் கிடக்க இந்தக் கொள்கைதான் காரணம். அதில் சுத்தமான காற்றும் குடிநீரும் அடக்கம். சூழலியல் பாதிப்புகள் அனைத்திற்கும் சந்தையில் ஏற்படும் தேவையும் பற்றாக்குறையுமே காரணம். அது அப்படி மாறியதற்கு உலக முதலாளித்துவமே காரணம். அதாவது பெருநிறுவனங்கள் (Corporate). எந்த மூலையிலுள்ள எவ்வளவு சிறிய நாடாக இருந்தா லும் இப்போதைய உலகச் சூழலில் இந்த வார்த்தை யாருக்குமே அந்நியமில்லை. நம் வாழ்வில் உலகப் பொருளாதாரத்தில் அவ்வளவு ஒன்றிப் போய்விட்டது. அதற்கு உதவியது உலகமயமாக்கம் ஊக்குவித்த தாராளவாதக் கொள்கை. அதுதான் சூழலியல் சமநிலையைச் சுத்தியலால் அடித்துக் கொண்டிருக்கிறது. சுற்றுச்சூழலில் அப்படியென்ன பாதிப்புகளை அந்தக் கொள்கை உண்டாக்கிவிட்டது?

தாராளமயப் பொருளாதாரக் கொள்கை உலகளவில் கால நிலைச் செயற்பாடுகளையும், சுற்றுச்சூழலையும் மொத்தமா கச் சீரழித்துக் கலைத்துப் போட்டுவிட்டது. நடந்தது என்ன? "உலக வெப்பமயமாத லைப் பற்றிக் கவலையில்லை. அதற்கும் எனக்கும் சம்பந்த மில்லை" என்று ஒருவரும் சொல்லமுடியாத அளவுக்கு மொத்த மனித இனத்தையுமே குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி னார்கள். இந்த நவீன உலகில் சூழலியல் பிரச்சினைகளிலிருந்து தப்பிப்பது யாராலும் முடியாது. அதற்கான பொறுப்பு மொத்தமும் அனைவருக்குமே சொந்தம். அந்தப் பொறுப்பின் வீதம் மாறுபடலாம், ஆனால் யாரும் தப்பிக்கமுடியாது.

வளர்ந்த நாடுகள் தேவையான உற்பத்தித் தொழிற்சாலைகளைத் தங்கள் நாடுகளுக்கு வெளியே வளரும் நாடுகளில் அமைத்து விடுகிறார்கள். அதன்மூலம் தங்கள் சுற்றுச்சூழலை மட்டும் பாதுகாப்பதில் பேரார்வம் கொண்டு முனைந்து கொண்டிருக் கிறார்கள். அதோடு தங்களுக்குத் தேவையான இலாபத்தை வளரும் நாடுகளின் சூழலைப் பலியாக்கிச் சம்பாதித்துக் கொள்கிறார்கள். அங்கு ஏற்பட்டிருக்க வேண்டிய சூழலியல் பாதிப்புகளை ஏழை நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கி றார்கள். அங்கிருந்து இலாபங்களை இறக்குமதி செய்கிறார்கள். சுற்றுச்சூழல் பிரச்சினைகள் அனைவராலும் சரிசமமாகப் பங்கிடப்படுவ தில்லை. சிலருக்கு வெற்றியையும் அபரிமித இலாபத்தையும் கொடுத்த உலகமயமாக்கல் பலருக்கு வறுமையையும், சுகாதார சீர்கேடுகளையும், மோசமான குடிநீர், மாசடைந்த

காற்று ஆகியவற்றையும் அள்ளி அள்ளிக் கொடுத்துக் கண்ணீர் சிந்தவைத்தது.

வெப்பமயமாதல், காலநிலை மாற்றம் போன்ற மோசமான சுற்றுச்சூழல் பிரச்சினைகளைத் தீவிரப்படுத்தியதில் தாராளவாதக் கொள்கைக்கு அதிகப் பங்குண்டு. இராட்சதத் தனமான காடழிப்பு, நீர்நிலைகள் ஆக்கிரமிப்பு, அதைச் சீரழித்தல் ஆகியவற்றை அதிகப்படுத்தியதும் அந்நிய முதலீடுகள்தான். சூழல்மீது அக்கறையின்றி முறையாகச் செயல்படாத சர்வதேச நிறுவ னங்களும் அப்படி ஏழை நாடுகளில் ஊடுருவும் விதமாக முதலீட்டுக் கொள்கைகளை பாதுகாப்பற்றதாக்கியதும் அதே தாராளவாதக் கொள்கைதான். 1990-க்குப் பிறகே சுற்றுச்சூழல் அழிக்கப்படுவதும், வெப்பமய மாதலும், இவற்றுக்குக் காரணமான கார்பன் வெளியேற்ற மும் அதிகமாக நடப்பதாக அரசுகளுக்கிடையேயான காலநிலை மாற்றக் குழு தெரிவித்தது.

இந்த விளைவுகளுக்குக் காரணமும் மனித தலையீடுகள் தான். உலகமயமாக்கலே தற்போதைய சூழலியல் பிரச்சினைகளுக்குக் காரணமென்பதைச் சர்வதேச அளவில் பல சூழலிய லாளர்கள் உரக்கப் பேசுகிறார்கள். அவர்களின் பேச்சு தற்போது எளிய மக்கள் மத்தியிலும் கேட்கத் தொடங்கியுள்ளது. அளவுக்கு அதிகமான தொழிற்சாலை உற்பத்தி, சர்வதேச வணிகத்தில் நுகர்வோர் கலாச்சாரத்தை அதிகப்படுத்தக் கையாளப்படும் வர்த்தக உத்திகள் அனைத்துமே இந்தக் குற்றத்துக்குப் பங்குதாரர்கள்.

கரிமவளி வாயுக்களை அதிகமாக வெளியேற்றுவது, சரக்குப் போக்குவரத்துத் துறை, தொழிற்சாலைகள், காடழிப்பு போன்ற செயல்கள்தாம். 1990 ஆம் ஆண்டு கரிமவளி வாயுவை வெளியேற்றுவதில் வெறும் 9 வீதம் மட்டுமே பங்கு வகித்த போக்குவரத்துத் துறை அடுத்த 15 ஆண்டுகளிலேயே 86 வீதமாக உயர்ந்தது. அதிலும் கப்பல், வான் வழிப் போக்குவரத்து அதிக பாதிப்புகளை வளிமண்டலத்தில் ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன. இவை உயர்ந்ததற்குக் காரணம் உலகமயமாக்கலால் அதிகமான வெளிநாட்டு முதலீடுகள். முன்பு உற்பத்தி செய்த சரக்குகளில் தத்தம் நாட்டுக்குள் விற்றதுபோக வெளிநாடுகளில் விற்பதற்காகக் கொண்டு சென்றார்கள். தற்போது வெளிநாடுகளில் உற்பத்தியாகும் தங்களின் மொத்த சரக்குகளையும் திரும்பக் கொண்டு வருகிறார்கள். அதோடு மற்ற நாடுகளுக்கும் அனுப்புகிறார்கள். இதனால் சரக்குப் போக்குவரத்து அதிகமானது. விமானமற்ற வானையும், சரக்குக் கப்பலற்ற கடலையும் பார்க்கவே முடியாத அளவுக்கு அவற்றின் எண்ணிக்கை அதிகமாகிவிட்டது. அதன் விளைவுகள் வளிமண்டலத்தையும், கடலையும் அழிவுப் பாதைக்கு அழைத்துச் செல்கிறது.

போக்குவரத்துத் துறைதான் அதிக லாபம் கொழிக்கும் தொழிலாகத் தற்போது பார்க்கப்படுகிறது. சர்வதேச, உள்நாட்டு போக்குவரத்துகள் குறித்த நிறுவனம் 2016 ஆம் ஆண்டு வெளியிட்ட ஓர் ஆய்வறிக்கைப்படி கரிமவளி வாயு வெளியேற்றம் முன்பை விடப் பல மடங்கு அதிகரித்துள்ளது நமக்குத் தெரியவந்தது. அதாவது ஆண்டுக்குச் சுமார் 16.4 மில்லியன் தொன் கரிமவளி வாயு வெளியேற்றப்படுகின்றது. இந்த விடயத்தில் நம் அனைவரின் மனநிலையும் ஒரே மாதிரியாகத் தானிருக்கிறது.

(19ஆம் பக்கம் பார்க்க)

சட்டத்துக்கு கட்டுப்படுமா பாத்தீனியம்?

பாத்தினீயம் என்பது மனித குலத்துக்கு ஆபத்தை ஏற் படுத்தக்கூடிய களைகளில் ஒன்று. இந்திய இராணுவம் இலங்கைக்கு வந்தபோது அவர்களது உணவிற்காகக் கொண்டு வரப்பட்ட ஆடுகள் மூலம் எமது மண்ணுக்குக் கடத்தப்பட்டது. தற்போது பெரும்பாலான விவசாய நிலங்களை இந்தக் களை ஆக்கிரமித்து நிற்கின்றது. கமக்காரர்கள் உணவுக்காகப் பயிரிடும் உணவுப் பயிர்களை வளரவிடாது தடுத்து விளைச்சலையும் குறைத்து விடும்.

மிகவும் வேகமாகப் பரவும் பாத்தீனியம் விவசாயத்திற்குப் பாரதூரமான பாதிப்புக்களை ஏற்படுத்துவதோடு, மனிதர்கள், விலங்குகளின் ஆரோக்கியத்திற்கும் ஆபத்தானது. இந்தக் களை, ஒவ்வாமையை ஏற்படுத்துவதோடு பலருக்கு சுவாசம் சம்பந்தப்பட்ட பல உடற் கோளாறுகளையும் உண்டாக்க வல்லது. எந்த வளர்ச்சிப் பருவத்தில் இருந்தா லும் குறிப்பிட்ட களையை வேருடன் பிடுங்கி, எரித்து அழிப்பது அல்லது விவசாயத் திணைக்களத்தால் சிபாரிசு செய்யப்பட்ட Metribuzin 70%WP (வர்த்தகப் பெயர் - Sencor Metrubuzin) என்ற களை நாசினியினை விசிறி அதனை அழிப்பது அந்நிலத்தின் உரிமை யாளரின் அல்லது குடியிருப்பாள ரின் கடமை என்று விவசாயத் திணைக்களம் அறிவித்துள்ள அதே வேளை சட்ட நடவடிக்கை களிலும் இறங்கியுள்ளது.

இந்த விடயத்தில், பாத்தினீயம் தொடர்பான சட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் அமுல்படுத்துவதற்கும் விவசாயப் பணிப்பாளர் நாயகத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. பாத்தீனியம் அற்ற சூழலை உருவாக்குவதற்காகச் சட்டம் மிக முக்கிய கருவியாக தற்போது உபயோகப்படுத்தப்படுகிறது. இந்த ஒழுங்கு விதிகளின் பிரகாரம், பாத்தீனியம் என்ற வேண்டாத களை காணப்படும் நிலத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் விவசாயப் பணிப்பாளர் நாயகத்திற்கு அல்லது அப்பிரதேசத்தின் பிரதேச செயலாளருக்கு உடனடியாக எழுத்து மூலம் அறிவிக்க வேண்டும். அவ்விதம் செய்யத் தவறின் அவர் தாவரப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ், குற்றமிழைததவராகவே கருதப்பட்டுத் தண்டிக்கப்படுவார்.

எந்தவொரு நபரும் தமக்குச் சொந்தமான அல்லது அவரது கட்டுப்பாட்டில் அல்லது அவரது முகாமைத்துவத்திற்குட்பட்ட இடத்தில் இக்களையை வளர் வதற்கு இடமளித்தல் அல்லது அக்களையை அழிக்கத்தவறும் பட்சத்தில் தாவரப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ்,தண்டனைக்குரிய குற்றமிழைத்தவராகக் கருதப்படுவார்.

எப்பகுதியிலேனும் இக்களையை வைத்திருப்பது, ஓரிடத்திலிருந்து வேறோரிடத்திற்குக் கொண்டு செல்வது என்பன தண்டனைக்குரிய குற்றங்களாகும். எவ்விடத்திலும் இக்களை காணப்படுவதாக ஒருவர் கண்டுபிடித்தால் அதுபற்றி உடனடியாக விவசாயப் பணிப்பாளர் நாயகத்திற்கோ அல்லது அப்பிரதேசத்தின் பிரதேச செயலருக்கோ நேரடியாகவோ அல்லது விவசாயப் போதனாசிரியர், கிராம உத்தியோகத்தர், சமுர்த்தி முகவர், விவசாய முகவர் ஆகிய அலுவலர்களில் யாராவது ஒருவரினூடாகவோ மேற்குறிப்பிட்ட அதிகாரிகளுக்கு அறிவிக்க வேண்டும்.

இவ் ஒழுங்குவிதிகள் 1.14 இன் கீழ், அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களாக யாழ்ப்பாண மாவட்டத்தில் விவசாயத் திணைக்களத்திலிருந்து 19 உத்தியோகத்தர்களும் கமநல அபிவிருத்தி திணைக்களத் திலிருந்து 08 உத்தியோகத்தர்களும் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்திலிருந்து 02 உத்தியோகத்தர்களுமாக மொத்தம் 30 உத்தியோகத்தர்கள் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்க ளாக வட மாகாணத்தில் மொத்தம் 114 அலுவலர்கள் இப்பணிக்காக விவசாயப் பணிப்பாளர் நாயகத்தால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்கள், பாத்தீனியம் பரவியுள்ள காணிகள், வீட்டுக் குடியிருப்புக்கள், பயிர்ச்செய்கை நிலங்கள் என்பவற்றைப் பரிசீலனை செய்வதற்காக வருகைதரும்போது, ஆதன உரித்தாளர்கள் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களுக்குத் தமது பூரண ஒத்துழைப்பை வழங்குதல் வேண்டும். அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களது கடமையைச் செய்யவிடாது தடுத்தல் தண்டனைக்குரிய குற்றமாகும்.

முதற்கட்டமாக, கோப்பாய், உடுவில் மற்றும் தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவுகளில், பாத்தினீயம் பரவிக் காணப்படும் வீட்டுக் குடியிருப்புக்கள், காணிகள் மற்றும் பயிர்ச்செய்கை நிலங்கள் என்பவற்றின் உரிமையாளர்களுக்கு இரண்டு வாரகாலப் பகுதியினுள் பாத்தினீயத்தை அகற்றுமாறு கோரும் மஞ்சள் அறிவித்தல் (Yellow Notice) வழங்கப்பட்டு வருகின்றன. இதுவரை 158 காணி உரிமையாளர்களுக்கு மஞ்சள் அறிவித்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

அவ்வாறு மஞ்சள் நிறபடிவங் களைப் பெற்றுக் கொண்ட காணி உரிமையாளர்களில் ஏழு பேர் குறித்த இரு வார காலஎல்லையினுள், பாத்தீனியத்தைக் கட்டுப்படுத்தத் தவறியமையால், அவர்களுக்கு சிவப்புநிற அறிவித்தல் (Red Notice) வழங்கப்பட்டு, மேலும், இரு வாரகால அவகாசம் வழங்கப்பட்டது.

(18ஆம் பக்கம் பார்க்க)



வேலிப்....

(14ஆம் பக்கம் பார்க்க)

'அண்ணை நீதான் ஒரு வழி பண்ணவேண்டும்."

ஆடுகால் மணியம் கடக்கிற பொட்டுகளில் ஒன்று அவருடைய மனைவியின் தமையன் வீட்டில் இருந்தது.

'ஆர் இந்த நேரத்தில் பொட்டால போறது?" என்று கேட்டால் "அது நான்" என்றபடி குரல் தந்துவிட்டுப் போய் விடுவார்கள். ஓரிரு முறை மணியத்தாரும் குரல் தந்து சமாளித்திருக்கிறார். போகிற வருகிறவர்களிடம் காரணம் கேட்கமாட்டார்கள்.

அமாவாசை தினமொன்றில் ஆடுகால் மணியம் பொட்டால் தொடுப்பு வீட்டிற்குப் போனதைக் கண்ட மச்சான்காரன் தன் வீட்டில் எப்பவும் கட்டி நிற்கிற கடியன் கறுவல் நாயை பொட்டின் பக்கத்துக் கதியாலில் கட்டிவிட்டார். அதுவும் பொட்டின் வாசலில் நிலத்தைக் கிண்டி குளிருண்டாக்கிக்கொண்டு படுத்து விட்டது.

கும்மிருட்டில் தொடுப்பு வீட்டிலிருந்து குசியாகத் திரும்பி வந்த ஆடுகால் மணியம் பொட்டுக்குள் நுழைவதற்காகக் குனிந்து கைகளை படுத்திருந்த நாயின் மீது ஊன்ற அது திடுக்கிட்டு மணியத்தாரைக் கவ்வியது. அதற்கு அகப்பட்டது மணியத்தாலின் மூக்குத்தான்.

ஆடுகால் அலறிய அலறலில் ஊரே விழித்துக் கொண்டது.

அரிக்கன் லாந்தரோடு



மச்சான்காரன் ஓடிவந்தான்.

'கவ்வ வேண்டிய இடத்தில் கவ்வாது விட்டிட்டுது." என்று தனக்குள் மச்சான் முணுமுணுத்துக் கொண்டான்.

"மூக்குப் போனாலும் பரவாயில்லை மனிசன் கிடைச்சாரே" என்று மணியத்தாரின் மனைவி திருப்திப்பட்டுக் கொண்டாள்.

சுரேந்திரன் பெரும் குரலில் சிரித்தான். அடுக் களைக்குள்ளிருந்த மனைவி எட்டிப் பார்த்தாள்.

"ஒண்டுமில்லை அப்பா..." என்றான் சுரேந்திரன்.

"ஒண்டுமில்லாததுக்கே சிரிக்கிறியள்?", சுரேந்திரன் சொன்னான் 'எங்க ஊரில் ஒரு சோக சம்பவம் நடந்தது. பிராந்துக் கிழவியின் வளவு பென்னம் பெரியது. புளிய மரங்கள், இலுப்பை மரங்கள் எனச் சோலையாக இருக்கும். புளியம்பழங்கள் சொரி கின்ற காலத்தில் அவற்றினைப் பொறுக்குவதற்கும் இலுப்பைப்பழம் பொறுக்குவதற்கும் அயல் அட்டையில் உள்ள சிலர் விடியமுன்னம் பொட்டுக்குள்ளால வந்திடுவினம். பொட்டுகளைப் படலையிட்டு கட்டி விட்டும் பயனில்லை. கிழவிக்குப் பொட்டுக்களை அடைக்க விருப்பமில்லை. அதேநேரம் தன் ஒரே வருமானத்தை இழக்கவும் விருப்பமில்லை.

ஒருநாள், நாலாம் சாமம் ஓலைப் பெட்டியையும் தூக்கிக் கொண்டு சுப்பரப்பா கிழவியின் வளவிற்குள் பொட்டுக்குள்ளால புகுந்தார். புளியமரத்தடியில் வெள்ளைச் சேலை அணிந்த உயரமான ஒரு உருவம் ஆடிக் கொண்டு நின்றிருந்தது. சுப்பரப்பாவிற்குப் புளியமரத்து முனிகளின் கதைகள் நினைவு வந்தது. 'ஆ' என்ற அலறியபடி நிலத்தில் சரிந்தார். அவ்வளவுதான் ஓடிவந்த பிராந்துக் கிழவி "அது நானடா" என்று எவ்வளவு கூறியும் பயனில்லை. கள்ளரைப் பயமுறுத்த எண்ணிய கிழவியின் திட்டம் முதல் நாளே சோகத்தில் முடிந்தது.

பொறுக்கிறவை பொறுக்கிக்கொண்டு போகட்டும் என்று கிழவி பாராமுகமா இருந்தாலும் சுப்பரப்பாவின் சாவிற்குப் பிறகு ஒருத்தரும் அந்த வளவுக்கை வரவில்லை. புளியமரத்து முனியோடு சுப்பரப்பாவின் ஆவியும் அங்கு உலாவுவதாக வதந்தி பரவிவிட்டது.

'சாப்பிட வாருங்கள்" என்றழைத்தபடி என் நண்பனின் மனைவி வந்தாள்.

சாப்பிடும்போதும் வேலிப் பொட்டுகள் பற்றியே பேசிக்கொண்டோம்.

"பொட்டுகள் ஏன் குறைந்து வருகின்றன?"

"பொட்டுகளுக்குள்ளால் சயிக்கில்கள் ஓட முடியாது."

"இப்ப றோட்டுகள் வசதியாக அமைச்சிட்டினம்."

"பெண்புரசுகள் இப்ப வெளியில் சுதந்திரமாகத் திரிய முடிகிறது."

"அந்தக் காலத்தில பெரும்பாலும் எல்லாரும் அலுவல்கள் முடிஞ்சால் வீட்டிற்குள் அடங்கிவிடுவர். இப்ப பெண்புரசு ஆண்பிள்ளைகள் எல்லாம் றோட்டிலதானே?

" இவையெல்லாம் காரணங்கள் என்றாலும் யாழ்ப்பாணத்தானின் விரிந்திருந்த மனம் இன்று ஒடுங்கிச் சுருங்கி சுயநலத்தோடு குறுகிவிட்டதுதான் காரணம். நாங்கள் நாங்களாகவில்லை."

"இந்தியன் ஆமியும் இலங்கை ஆமியும் யாழ்ப்பாணத்தில வைச்ச பொட்டுகளையும் கவனிக்கவேணும்." என்றாள் சுரேந்தனின் மனைவி.

"நீர் இப்ப எந்தப் பொட்டைச் சொல்லுகிறீர்?"

"இரண்டையும்தான்."

ஆதலால்...

(21ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவை சிறிய புத்தகங்கள். பத்துப்பக்கம் படியுங்கள். பிடிக்காவிட்டால் படிக்காமல் விடலாம். ஆனால் படிக்கும் ஒவ்வொருவரையும் இலக்கியம் நோக்கி ஈர்த்துக் கொள்ளும் என்பது என் நம்பிக்கை. அதுவே என் விருப்பமும்.

ஸ்டெபன் ஸ்வெய்க் எழுதிய THE LETTER FORM UNKNOWN WOMAN என்னும் குறுநாவலின் தமிழாக்கப் பிரதி 'யாரோ ஒருத்தியின் கடிதம்' என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. தமிழில் Dr.ராஜ்ஜா மொழிபெயர்த்துள்ளார். இந்தக் குறுநாவல் திரைப்படமாகவும் வெளியாகியிருக்கிறது. மிக எளிமையாகப் புரிந்து கொள்ளக்கூடிய குறுநாவல். ஜவான் துர்கநேவ்வின் பிரதி 'சீமானின் திருமணம்' என்ற பெயரில் நா.பாஸ்கரன் மொழிபெயர்ப்பில் வெளிவந்திருக்கிறது. இலக்கிய உலகம் கொண்டாடும் இலக்கியமேதை பியோதர் தஸ்தயேவ்ஸ்கியின் 'வெண்ணிற இரவுகள்' தமிழில் ரா.கிருஷ்ணையா மொழிபெயர்ப்பில் வந்திருக்கிறது. இது இலக்கியச் செறிவான, ஆழமாகப் படிக்கவேண்டிய சிறப்பான பிரதியாக அமைந்திருக்கிறது. இந்தப் பிரதிகளின் வெற்றியே உணர்ச்சிதான். அதன் வல்லமையே அதுதான். இந்தக் குறுநாவல்களைப் படிக்கும் ஒவ்வொருவருக்குள்ளும் அவை மிகப் பெரியதொரு தாக்கத்தை நிகழ்த்திக் காட்டும். முடிவில் ஓர் இலக்கிய இன்பத்தைப் பெறுவீர்கள்.

உயரப்...

(21ஆம் பக்கத் தொடர்ச்சி)

தம்பதிகள், இரு பிள்ளைகளை விட்டு விட்டு திடீரென்று இறந்து போகும் பெண், கடன் தொல்லையில் சிக்கியவர், தோல்வி அடைந்தவர் எல்லோரும் இக்கதைகளில் உண்டு.

சாதாரணமாக கதைகளில் அவர்கள் கஷ்டம் தீர்ந்து விடுவது போலவோ, இல்லை ஒரு வழி பிறப்பது போலவோ காட்டப்படும். ஆனால், வண்ணதாசன் அதைச் செய்வதில்லை. அங்கே தான் வெளிப்படுகிறது வண்ணதாசனின் தனித்தன்மை. சிக்கல் நிறைந்தவரின் வாழ்க்கையில் நடக்கும் வேறு சில அபூர்வமான தருணங்களைக் காட்டுகிறார். அதன் மூலம் வாழ்க்கை வாழ்வதற்கே என்று சொல்லாமல் சொல்கிறார். வண்ணதாசனின் கதைகளை மேலும் படிக்கத் தூண்டுகிறது இந்தச் சிறுகதைத் தொகுப்பு.

சட்டத்துக்கு....

(17ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிவப்புநிற அறிவித்தலைப் பெற்ற ஏழு காணி உரிமையாளர்களும் தமது காணிகளில் காணப்பட்ட பாத்தீனியக் களைகளை வெட்டி அகற்றியுள்ளார்கள். இவ்வாறாக, 27.5 ஏக்கர் விஸ்தீரணத்தில் பாத்தீனியக் களையானது வெட்டி அகற்றப்பட்டுள்ளது.

இரண்டாம் கட்டமாக, நல்லூர் பிரதேச செயலர் பிரிவில், 30.11.2018ம் திகதியளவில் 24 காணி உரிமையாளர்களுக்கு மஞ்சள் நிற அறிவித்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. அவ்வாறு மஞ்சள் நிறப் படிவங்களைப் பெற்றுக் கொண்ட காணி உரிமையாளர்கள், சுமார் 12.0 ஏக்கர் விஸ்தீரணத்தில் பரவிக் காணப்படும் பாத்தீனியக் களைகளை வெட்டி அகற்றும் செயற்பாட்டை ஆரம்பித்துள்ளார்கள்.

01.12.2018 அன்று, நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் உள்ள காணி மற்றும் பயிர்ச் செய்கை நிலங்கள் என்பவற்றின் உரிமையாளர்களுக்கு, இரண்டுவார காலப் பகுதியில் பாத்தீனியத்தை அகற்றுமாறு கோரும் மஞ்சள் நிற வழங்கப்பட்டுள்ளன. இதுவரை 21 காணி உரிமையாளர்களிடம் மஞ்சள் நிற அறிவித்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. அவ்வாறு மஞ்சள் படிவங்களைப் பெற்றுக் கொண்ட காணி உரிமையாளர்கள், சுமார் 10.0 ஏக்கர் விஸ்தீரணத்தில் பாத்தீனியக் களைகளை வெட்டி அகற்றும் செயற்பாட்டை ஆரம்பித்துள்ளார்கள். இதைத் தொடர்ந்து, யாழ்ப்பாணப் பிரதேச செயலர் பிரிவில், 10.12.2018 ஆம் திகதி அன்று சுண்டிக்குளி வடக்கு கிராம அலுவலர் பிரிவிலும், 14.12.2018ம் திகதி கோட்டை கிராம அலுவலர் பிரிவிலும் பாத்தீனியத்தை இரண்டு வாரகாலப் பகுதியினுள் அகற்றுமாறு கோரும் மஞ்சள் அறிவித்தல் வழங்கப்படுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

சிவப்புநிற அறிவித்தல் வழங்கப்பட்டு, இருவாரகால எல்லையினுள் தமது உடமையிலுள்ள காணியில் காணப்படும் பாத்தீனியத்தை கட்டுப்படுத்தத் தவறியவர்களுக்கெதிராக, ஒழுங்குவிதிகள் 1.15.1 இன் படி, அப் பிரதேசத்திற்கு நியாயாதிக்கம் கொண்ட நீதவான் நீதிமன்றில் வழக்கு பதிவு செய்யப்படும். அக் காணி உரிமையாளர் குற்றம் செய்தவராக நிஷரூபிக்கப்பட்டால், அவருக்கு ஒரு மாதத்திற்குக் குறையாததும், ஆறு மாதத்திற்கு மேற்படாத சிறைத்தண்டனை அல்லது பத்தாயிரம் ரூபாவிற்குக் குறையாததும் அல்லது ஒரு இலட்சம் ரூபாவிற்கு மேற்படாத தண்டப்பணம் அறவிடப்படும். அல்லது இவையிரண்டு தண்டனையும் விதிக்கப்படும். தாவரப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ், தவறிழைப்பதற்காகப் பயன்படுத்தப்படும் எந்தவொரு வாகனமும், வேறு உபகரணங்கள், பாவனைப் பொருட்கள் என்பனவற்றை அரசுடைமையாக்குவதற்கு இக் குற்றம் காரணமாக அமையலாம் என பாத்தினீயம் தொடர்பான விவசாயத் திணைக்களத்தின் அறிக்கை தெரிவிக்கிறது.

ஆரிட்டை கொல்லி அழ?



இது நாட்டு நடப்பைப் பற்றிய ஒரு (வி)சித்திரத் தொடர்

கழுதைக்குத் தெரியுமோ? கற்பூர வாசனை

உங்களுக்கு நடைமுறை தெரியாட்டி ஒருக்காக் கொழும்புக்குப்போய் பாருங்கோ. அங்கை அதை அதை அது மாதிரிச் செய்யிற பக்குவத்தைக் காணலாம். அங்கையும் தெருக்கரையிலையும், கடற்கரையிலையும், திறந்த வெளியிலையும் வியாபாரம் செய்யினம். பாரம்பரியம் எண்டதை அழிக்காமல், குழப்பாமல் எப்பிடி அதைப் பாதுகாக்கலாமோ அப்பிடி அதைப் பாதுகாக்கினம்.

அங்கை வவுனியா மதவாச்சி தொட்டு அம்பாந்தோட்டை வரை சிங்களக் கலாசாரத்தோடை சம்பந்தப்பட்ட அத்தனை சாப்பாட்டுச் சாமான்களும் உதாரணத்துக்குச் சொல்லப்போனால் கஞ்சி விற்கிறாங்கள். அப்பமும், வடையும் சுட்டு விக்கிறாங்கள். சிங்களத்தின் பண்டங்கள், பணியாரம் எண்டு கன சாமான்களை அவையின்ரை குணம்குறி மாறாமல் விற்க விட்டிருக்கிறாங்கள். கசுக்கொட்டைக் கெண்டு ஒரு கிராமமே இருக்கு. அவையும் இலங்கைக்குள்ளைதானே இருக்கினம். அவைக்கு ஆரும் மாபிள் போட்ட நிலத்திலை வைச்சு அப்பம் சுட்டு விக்கச் சொன்னவையே. அவை மண்ணாலை மெழுகின கொட்டிலிலை வைச்சு தங்கடை வியாபாரத்தைச் செய்யினம். அங்கை போய் அவைக்கு ஒருத்தரும் கரைச்சல் குடுக்கிறேல்லை. அப்பிடி வந்தாலும் அவை அப்பிடியான ஆக்களுக்குப் புத்திமதியாகச் சொல்லிப் போட்டுப் போகினமேயொழிய அவையளை அவை செய்யிற வியாபாரத்தை மூடச் செய்யிற அளவுக்கு அவைக்குத் தலை இடி குடுக்கிறேல்லை.

தமிழ் கலை கலாசராம் பண்பாடு எண்டு கனக்கப் பேசிறம். அதுக்கு எண்டு பல்கலைக் கழகத்திலை துறையளும் இருக்கு. அதிலை கனபேர் படிச்சுக் கலாநிதிப்பட்டமும் எடுத்திருக்கினம். ஆனால் ஒருதரும் கலாசாரத்துக்கும் பண்பாட்டுக்கம் சேவை செய்யிற நோக்கம் இல்லை. அந்தத் துறையிலை ஏதாவது வேலை 7 கிடைக்குமோ பிழைப்பம், எவ்வளவு காசு கிடைக்கும் எண்டு யோசிப்பினமே ஒழிய வேறை ஒரு பிரயோசனமுமில்லை.

நாங்கள் முன்னேற வேணும். எங்கடை சமூகம் முன்னேற வேணும். நாடு முன்னேற் வேணும். நாங்களும் சிங்கப்பூர் மாதிரி வரவும் வேணும் எண்டது எல்லாற்றை ஆசையும், எதிர்பார்ப்பும்தான். அது பிழை இல்லை. எல்லாரும் உயர வேணும். ஆனால் அடி அத்திவாரம் சரியாப்ட் போடாமை காத்திலை ஏறிக் கற்பனையிலை நிக்கிறமாதிரியான விளையாட்டு வேண்டாம்.

வெள்ளைக்காரன் ரொயிலற் பேப்பர் பாவிக்கிறான்தான். அப்பிடி நாங்கள் இஞ்சை பாவிக்க வெளிக்கிட்டால். அதைப் பாவிக்கிற அளவுக்கு மனம் வாக்குக் காயம் எண்டு சகலதாலையும் நாங்கள் வளந்திருக்க வேணும்.

அம்மாச்சிக்கு கே எவ் சீ மாதிரிக் கண்ணாடிக் கூடு அடிச்சு வியாபாரம் செய்ய வேணும் எண்டு கட்டாயப் படுத்தினால் ஏன் நாங்கள் அம்மாச்சிக்குப் போக வேணும். கே எவ் சிக்கும் பீசா கட்டுக்கும் போய் சுகாதாரத்துக்கு உதவாத அந்தச் சாப்பாட்டைத் தின்னலாமே! என் அம்மாச்சிக்குப் போக வேணும்? எங்கடை கலாசாரச் சூழலிலை இருந்து எங்கடை சாப்பாட்டைத் தின்ன வேணும் எண்டு யோசிக்கிற ஆக்களுக்கு எண்டு இருக்கிற பழைய முறையான இடத்தை எல்லாம் பீ ஏச் ஐ மார் அழிச்சுப் போட்டாங்கள்.

சமூக அபிவிருத்தி, சமூகமுன்னேற்றம், சனத்தின்ரை சுகாதாரம் எண்டு சொல்லிக் கொண்டு எங்கடை கலாசார சாப்பாட்டுக் கொட்டகைகளையும், பண்பாட்டு உணவு இடங்களையும் அழிச்சு ஒழிக்கிற காக்கிச் சட்டைக் கொம்கனியளின்ரை தொல்லையளை நாங்கள் ஆரிட்டைச் சொல்லி அழ?

- கோளரங்கன்.

தாராளவாதம்...

(16ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொருளாதார வளர்ச்சி, சுற்றுச்சூழல் என்ற இரண்டில் ஏதாவது ஒன்றைத்தான் தேர்வு செய்யவேண்டும். ஒன்று வேண்டுமெனில் ஒன்றைத் தியாகம் செய்யத்தான் வேண்டும் என்பதுதான் அந்த மனநிலை. பொருளாதார வளர்ச்சியும் சூழலியல் கேடுகளும் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு இந்த இருபத்தோறாம் நூற்றாண்டில் பிணைக்கப்பட்டுவிட்டது. உலகமயமாக்கலின் முக்கிய அங்கமான நுகர்வுக் கலாச்சாரம் இருக்கும்வரை உலக வெப்பமயமாதலும் அதிகரித்துக்கொண்டே தானிருக்கும்.

உலகமயமாக்கல் பொருளாதாரம் என்ற புத்தகத்தில் ஹூவர்ட், வெர்டியர் என்ற இரண்டு பொருளாதார நிபுணர்களும் இப்படிக் குறிப்பிட்டிருக்கிறார்கள், 'இந்தத் தாராளவாதப் பொருளாதாரக் கொள்கை, அதிகரித்துவிட்ட சரக்குப் போக்குவரத்தால் ஏற்படும் மாசுபாட்டுக்கு மட்டும் காரணமாக அமையவில்லை. மனிதர்களின் பேராசையை அளவுக்கு அதிகமாகவே உற்பத்தி செய்துகொண்டிருக்கிறது. அதன் விளைவாக காடழிப்பும், பசுமை இல்ல வாயுக்களின் வெளியேற்றமும் கடந்த 30 ஆண்டுகளில் ராட்சசத்தனமாக அதிகரித்துவிட்டது. மக்களின் ஆசைகளைத் தூண்டிவிட்ட நுகர்வுக் கலாச்சாரம் ஊக்குவிக்கப்பட்டதே இதற்குக் காரணம்."

ஆசைகளைத் தேவைகளாக்கி அதைச் சரக்குகளாக்கி அந்தச் சரக்குகளை வியாபாரமாக்கி அவற்றுக்குச் சந்தைகளில் பற்றாக்குறையையும் உண்டாக்கி மேலும் மேலும் உற்பத்தி செய்துகொண்டே போகிறார்கள். அது மேலும் மேலும் சூழலை அழித்துக் கொண்டேயிருக்கிறது. உதாரணத்துக்குச் சீனாவுக்கு பிரேசில் ஏற்றுமதி செய்யும் சோயா உற்பத்தி 2003 ஆம் ஆண்டு 6 மில்லியன் தொன். அதுவே தற்போது 50 மில்லியன் தொன். உலகின் மிகச் சிறந்த பல்லுயிர்ச்சூழல் பகுதியான அமேசானோடு அமைந்திருக்கும் பிரேசிலில் இந்தச் சோயா உற்பத்திக்காகப் பல லட்சம் ஏக்கர் காடுகள் அழிக்கப்பட்டன. வியாபார நோக்கில் விவசாய நிலங்களாக மாற்றப்பட்டன. அதுவும் சீனாவின் முதலீடுகளில். சீனாவின் லாபத்துக்காகப் பிரேசிலின் காடும் காட்டுயிர்களும் அப்பகுதிவாழ் மக்களின் வாழ்வாதாரமும் பிடுங்கப்படுகிறது. அதுவும் சீனா உலகச் சந்தையை பிடிப்பதற்காக.

இதேபோல் பருத்தி, பயிர்கள், அரிசி வகைகள் போன்றவற்றை இந்தியா உலகின் பல்வேறு முக்கிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றது. ஆனால் இந்தியாவில் இன்னமும் பல்லாயிரம் மக்கள் உணவின்றித் தவித்துக்கொண்டு தானிருக்கிறார்கள். அதேசமயம் பல ஐரோப்பிய, அமெரிக்க நிறுவனங்களின் உற்பத்தித் தொழிற்சாலைகளும் இந்தியாவில்தான் இயங்கி வருகின்றன. இந்த அனைத்து செயல்களுமே ஒருவித சங்கிலித் தொடரால் பிணைக்கப்பட்டுள்ளன. அந்தச் சங்கிலித்தொடர் சூழலியல் கேடுகளை நோக்கி நீள்கின்றன. இயற்கைப் பேரிடர்களுக்கும், கடல்மட்ட மாற்றங்களுக்கும் அவை வழிவகுக்கின்றன. அது குறைவான கடல்மட்ட உயரத்தில் அமைந்துள்ள துவாலு, பலாவு, மாலத்தீவு போன்ற தீவுகளையும் அதன் மக்களையும் நீருக்கு இரையாக்குகின்றன.

உலகச் சூழலியல் கேடுகளில் பங்கு வகிக்காத அந்த மக்களின் அழிவு உலகமயப் பொருளாதாரக் கொள்கையால் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. பொருளாதாரப் பலன்கள் எப்படிச் சமமாகப் பங்கிடப் படுவதில்லையோ! அதேபோல் இந்தப் பேரழிவுகளும் அனைவருக்கும் சமமாகப் பங்கிடப் படுவதில்லை. ஆம், லாபம் ஒருவருக்கும் விளைவுகள் ஒருவருக்குமாகச் சென்றடைந்து கொண்டிருக்கின்றது. இதுதான் தாராளவாத உலகமயப் பொருளாதாரக் கொள்கை இந்த உலகில் உண்டாக்கிய விளைவுகள். இது மாறவேண்டுமென்றால் புதிய பொருளாதாரக் கொள்கைகள் சர்வதேச அளவில் நிர்ணயிக்கப்பட வேண்டும். அது அனைத்து நாடுகளுக்கும் நன்மை பயப்பதாக அமையவேண்டும். ஒரு நாட்டைச் சுரண்டி மற்றொரு நாடு வளம்பெறுவதாக அமையக்கூடாது.

■ நா.யோகேந்திரநாதன்

நீந்திக் கடந்த நெருப்பாறு 64

நன்றி தமிழ்லீடர் – அவுஸ்ரேலியா

சுந்தரம் வெள்ளாங்குளம் சந்திக்கு வந்த போது நேரம் பத்து மணியைத் தாண்விட்டது. அடிக்கடி வந்து குண்டுவீசி விட்டு மேலெழும்பிய விமானங்களும் தொலைவில் கேட்ட எறிகணை ஒலிகளும் சண்டை தொடங்கி விட்ட செய்தியை அவனுக்குத் தெரிவித்துவிட்டன.

அவன் முழங்காவிலுக்குப் போகும் எண்ணத்தைக் கைவிட்டு, சைக்கிளை இலுப்பைக்கடவைப் பக்கம் திருப்பிவிட்டான். புத்து வெட்டுவானிலிருந்து நீண்ட தூரம் ஓடி வந்திருந்த போதிலும் களைப்பையும் பொருட்படுத்தா மல் சைக்கிளை வேகமாகச் செலுத் தினான். சிரமம் கொடுத்த கிடங்கு பள்ளங்களைக் கூட அவன் பொருட்படுத்தவில்லை.

அவன் இலுப்பைக்கடவைப் பாடசாலையை நெருங்கிய போது இடம்பெயர்ந்து அங்கு தங்கியிருந் தோரில் பெரும்பான்மையானோர் மூட்டை முடிச்சுக்களுடன் வெளியேறிக்கொண்டிருந்தனர். விடத்தல் தீவிலிருந்து வந்தவர்கள் ஆங்காங்கே மர நிழல்களில் களைத்துப் போய் குந்தியிருந்தனர். சில இளைஞர்கள் அவர்களுக்கு இளநீர் வெட்டிக்கொண்டு வந்து கொடுத்ததை விட வேறு எந்த உதவியும் வழங்கப்பட்டதாகத் தெரியவில்லை.

சுந்தரம் என்ன செய்வதென யோசித்தவாறே தயங்கி நின்ற போது அவனருகில் ஒரு உழவு இயந்திரம் வந்து நின்றது. சாரதி ஆசனத்தில் அவனின் பழைய நண்பனான முருகையா அமர்ந் திருந்தான்.

"என்ன மச்சான் என்ன யோசினை?", எனக்கேட்டான் முரு கையா.

"யோசினை ஒண்டுமில்லை.. இந்தச் சனம் எங்கை போகுது, என்ன செய்யப் போகுது எண்டு யோசிக்கிறன்".

"இப்ப.. நீ.. என்ன செய்யப் போறாய்?"

"அப்பிடிச் செய்ய ஒண்டு மில்லை... சத்தம் கேட்டாப்போல என்னண்டு பாப்பமெண்டு வந்தன்", என்றான் சுந்தரம்.

"அப்ப.. ஓரிடத்துக்குப் போட்டுவருவம்.. வாறியே?"
"எங்கை?"

"சண்டை நடக்கிற இடத்துக் குச் சாப்பாடு கொண்டு போக வேணுமெண்டு ட்றக்ரரைக் கேட் டாங்கள்.. நானும் வாறன் எண்டு வெளிக்கிட்டன். வாவன் போவம்"

"இதைக்கூடச் செய்யாட்டில் நாங்கள் இந்த மண்ணிலை பிறந்ததிலை என்னஅர்த்தம்? நில் இந்தச் சைக்கிளை அந்த வீட்டிலை விட்டிட்டு வாறன்", என்றுவிட்டு சைக்கிளை உருட்டிக் கொண்டு ஓடினான் சுந்தரம். வழியிலை போய்க் கொண்டிருக்கும்போது முருகையா சொன்னான், "றோட்டாலை போக ஏலாது. கிபீர்க்காரன் பொழிஞ்சு விட்டிடுவன். காட்டுப் பாதையாலை தான் போகவேணும்"

"அது பிரச்சினையில்லை.. எனக்கு இந்தக் காட்டிலை தெரியாத பாதையில்லை" என்றான் சுந்தரம்.

சமையல் பகுதியில் போய் தேயிலைப் பெட்டிகளில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த சாப்பாடுகளையும் ஏற்றிக்கொண்டு அவர்கள் புறப்பட்டனர். இரு போராளிகளும் துப்பாக்கியுடன் உழவு இயந்திரத்தில் ஏறிக்கொண்டனர். காட்டுப் பாதையால் உழவு இயந்திரத்தை செலுத்துவது அவ்வளவு இலகுவானதாக இருக்கவில்லை. அவை ஏற்கனவே கள்ள மரம் ஏற்றுவதற்குப் பாவிக்கப்பட்ட பாதைகள், காட்டுக்குள் மரம் அறுப்பதைப் போராளிகள் முற்றாகத் தடை செய்து விட்டதால் அந்தப் பாதைகள் முற்றாகவே பற்றைகள் வளர்ந்து, பாவிக்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டன. பாதை அருகிலும் பற்றைகள் வளர்ந்து நீட்டிக்கொண்டு உழவு இயந்திரத்தில் இருந்தவர்களின் உடலைப் பதம்பார்த்தன.

ஒரு மைல் தூரம் வருவதற்குள்ளாகவே முருகையா சலித்துப் போய் வாகனத்தை நிறுத்தி விட்டான். அவன் போராளிகளைப் பார்த்து, "தம்பியவை, இதுக்காலை வாகனம் கொண்டு போகேலாது. மேலை கவனமாய்ப் பாத்துக் கொண்டு றோட்டால போவமே?", எனக் கேட்டான்.

அவர்கள் எதுவும் பதில் சொல்ல முடியாமல் ஒருவரை ஒருவர் பார்த்தனர். அவர்கள் போகச் சொல்லி மேலிடம் கூறிய பாதையை விட்டு வேறொரு வழியால் போகும் போது ஏதாவது ஒரு சிறிய அனர்த்தம் நடந்தாலும் அவர்கள் கடுமையான தண்டனைக்கு முகம் கொடுக்க வேண்டிவரும். அது மட்டுமன்றி காலை, மதியம், இரவு என மூன்று நேரத்துக்கும் பொதுவாகப் போகும் உணவு போராளிகளுக்குப் போய்ச் சேராவிடில் அவர்கள் பட்டினியுடன் எப்பிடிச் சண்டையிடுவது என்ற கேள்வியும் அவர்களிடம் எழுந்தது.

அவர்களின் இக்கட்டான நிலையைச் சுந்தரம் புரிந்து கொண்டான். அவனைப் பொறுத்தவரையில் போராளி களுக்கு பங்கர் அமைப்பதற்கு அந்தக் காட்டில் மரக்குற்றிகள் ஏற்றிய அனுபவம் உண்டு. அத்துடன் கொடிகளுக்குள் மறைந்து கிடக்கும் அடி மரக் கட்டைகளையும் இனங்கண்டு அவற்றைத் தவிர்த்து உழவுயந்திரத்தை ஓட்டவும் அவனால் முடியும். "மச்சான், விடு நான் ஓடுவன். இந்தக் காட்டிலை லொறியே ஓடி எனக்குப் பழக்கம்", என்றான் சுந்தரம்.

முருகையா எழுந்து மட்காட்டில் அமர்ந்து கொள்ள சுந்தரம் சாரதி ஆசனத்தில் ஏறி உழவுயந்திரத்தை ஓட்ட ஆரம்பித்தான். அவன் பாதையை மிக அவதானமாகப் பார்த்து வாகனத்தை ஓட்டிய போதும் அடிக்கடி தலைக்கு மேலேயும் கவனிக் கத்தவறவில்லை. அந்தக் காட்டில் ஒரு விதமான கொடிகள் உண்டு. அவை இரும்புக் கம்பியை விட வலிமையானவை என்பதுடன் அடர்ந்த சிறு இலைகளால் கொண்டவை. அந்த இலைகளின் பின்புறத்தில் வலிமையான வளைந்த முட்கள் உண்டு. அவை நிலத்திலிருந்து எழுந்து மரங்களில் தொற்றி கிளைகளில் அடர்ந்து தொங்கிக் கொண்டிருக்கும்.

அது நிலத்தில் வேரூன்றியிருக் கும் இடத்தில் உழவுயந்திரத்தின் முன் சில்லு ஏறும்போது அது அதற்குள் சுற்றப்பட இழுபட்டு மரத்திலிருந்து கும்பலாகக் கீழே விழும். அது சாரதி மேலோ அல்லது மட்காட்டில் இருப்பவர் மீதோ விழுந்தால் வாகனம் தடுமாறி எங்காவது இடிபட வேண்டியது தான். அதைத் தலையிலிருந்து எடுக்கும் போது முட்களால் கீறப்பட்டு முகம் இரத்த மயமாகிவிடும். அதன் காரணமாகச் சுந்தரம் அடிக்கடி மேலே மரக் கொப்புகளை அடிக்கடி கவனித்துக் கொண்டான்.

அடர்ந்த காட்டுக்குள் வந்து கொண்டிருந்தபோது அவன் அப்படி ஒருமுறை அண்ணாந்து பார்க்கும்போது ஒரு பாலை மரத்தின் இலைகளுக்கு இடையே வித்தியாசமான ஏதோ ஒன்று தெரிவது போலிருந்தது. அதை நன்றாக உற்றுப் பார்த்த போது அது ஒரு 'கெமோபிளக்' சீருடை என்பதை அவன் புரிந்து கொண்டான். திடீரென உழவு இயந்திரத்தை நிறுத்தி 'பிரேக்' அடித்த சுந்தரம் போராளியைத் தட்டி மெல்லிய குரலில் 'ஆமி', என்றுவிட்டு மரத்தைச் சுட்டிக் காட்டினான். போராளி விநாடிகூடத் தாமதிக்கவில்லை. துப்பாக்கிக் குண்டு மரக் கொப்பை நோக்கிப் பாய ஒருவன் அதிலிருந்து தலை கீழாக விழுந்தான். அதேவேளை உழவு இயந்திரத்திற்குச் சில அடிகள் முன்பு பெரும் வெடியோசை அதிரப் புகைமண்டலம் எழுந்தது.

சற்றுத் தொலைவில் பற்றை சரசரக்கவே மற்றப் போராளி அதை நோக்கி வெடி தீர்த்தான். இருவர் எழுந்து ஓடுவதைக் கண்ட போராளிகள் இருவரையும் சுட்டு வீழ்த்தினர்.

மிக அவதானமாக அவர்களின் அருகில் சென்ற போது அவர்கள் இருவரும் இறந்து விட்டனர். மரத்தால் விழுந்தவனும் கழுத்து முறிந்து இறந்து போயிருந்தான். மூன்று பேரின் சடலங்களையும் தூக்கி கொண்டுவந்து பாதைக் கரையில் போட்டனர்.

சுந்தரத்தைப் பொறுத்த வரையில் தாங்கள் உயிர் தப்பியது என்பதை விட அந்தச் சடலங்கள் அவனுக்கு அளப்பரிய கோபத்தை மூட்டின.

(நெருப்பாற்றில் நீத்துவோம்)

உயரப் பறக்கும் வண்ணதாசன்

■ சுவேதா ஜீவன்

'வண்ணதாசன்' என்ன ஒரு வித்தியாசமான, ரசனையான பெயர். ஆனாலும் முதலில் எனக்கு தி.க.சிவசங்கரனே அறிமுகமானார். அவரைப் பற்றிப் படிக்கப் படிக்க அவ்வளவு நெகிழ்ச்சியாய் இருந்தது. 'வண்ணதாசன்' என்ற பெயரில் சிறுகதைகளும், 'கல்யாண்ஜி' என்ற பெயரில் கவிதைகளும் எழுதுவது அவர் மகன்தான் என்றவுடன் எங்கிருந்தோ ஒரு அன்னியோன்யம். சாகித்ய அக்கடமி விருது அறிவிக்கப்பட்ட போது, அங்கொன்றும் இங்கொன்றுமாக இன்னும் சில கதைகளைப் படித்திருந்தேன். சமீபத்தில் தான் அவருடைய 'உயரப் பறத்தல்' என்னும் சிறுகதைத் தொகுதியை வாங்கினேன்.

மனிதர்கள் மீது இருக்கும் அடிப்படை அன்பும் மனிதத்தின் மீதான நம்பிக்கையும் தான் வண்ணதாசன், கூடவே திருநெல்வேலி மீதான காதலும்! சிலருக்கு மொழியின் மீது ஆளுமை, சிலருக்கு காட்சிச் சித்திரிப்பில், சிலருக்கு நகைச்சுவையில், சிலருக்கோ திடுக்கிடும் திருப்பங்களை தருவதில். வண்ணதாசனுக்கு நம்மைப் போன்ற கதை மாந்தர்களை படைப்பதிலும், மனதுக்கு நெருங்கி வந்து காட்சிகளை விவரிப்பதிலும், மிக நுணுக்கமாக அதே சமயம் ஒரு தன்னனுபவத்தைக் கொடுக்கக் கூடிய ஒரு விவரணை செய்வதிலும் என்ன ஒரு தேர்ச்சி.

அவர் கதைகளில், கதை மாந்தரின் சோகங்களோ மனக் குறைகளோ முழுவதுமாக சொல்லப் படுவதில்லை. ஒரு கோடு மட்டும் காட்டுவார். அடுத்தவரிடம் இன்பத்தைத் தானே சொல்ல வேண்டும். எல்லோரிடத்திலும் கிடக்கும் கஷ்டங்களை ஏன் அப்படிச் சொல்லி அடுத்தவரையும் அழ வைக்க வேண்டும் என்பதைப் போல.

ஆங்கிலத்தில் 'The devil lies in the details' என்பார்கள். அது போல், நுண்ணிய வார்த்தைகளில் நாம் எதிர்பார்க்காத அனுபவங்களைத் தருபவர் வண்ணதாசன். வாழை இலையில் இருந்து சொட்டும் நீர்த்துளியிலும், சிறு துளை வழியாகச் சீறுகின்ற காற்றிலும், சுளகில் காயும் கத்தரிக்காயிலும், ஜன்னல் கம்பியின் துருவிலும், உபயோகமின்றிக் கிடக்கும் உரலில் தேங்கிக் கிடக்கும் நீரிலும், காற்றில் படபடக்கின்ற காலண்டர் தாளிலும், அடுப்புத் தழலின் நீலத்தில் கூட.

வெயிலில் கூட எத்துணை அனுபவங்களைக் கொடுக்கிறார். அடிக்கும் வெயிலுக்கும், ஜன்னல் வழியாக வீட்டிற்குள் அளவாக விழும் வெயிலுக்கும், காசு காசாக கீழே விழும் வெயிலுக்கும் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு அர்த்தம், அனுபவம். எல்லாக் கதைகளுக்கும் சிக்கல்களும்

அதைத் தீர்க்கும் முறைகளும், கடைசியில் ஒரு தீர்வும் இருந்தே ஆக வேண்டும் என்று என்ன அவசியம்? தீர்வில்லாக் கதைகளும், பிரச்சினையே இல்லாத கதைகளும் உண்டு. வேலைக்குப் போகாத கணவன், தன் குடும்பம் என்றான பின்னர், பெற்றோரை உதாசீனப் படுத்தும் மகன், சந்தேகப் பேயினால் ஆட்டப்படும்

(18ஆம் பக்கம் பார்க்க)

காற்றை மொழி பெயர்த்தல்



நான் செல்லும் திசையெங்கும்
வளர்ப்புப் பிராணியென
என்னைத் தழுவியபடி வருகிறது காற்று
அதன் ஊடாட்டமின்றி
ஒரு கணமும் யாராலும் வசிக்க முடியாது
சில சமயமது தன்னை அறியாமல்
இலைகளினிடை ஆழ்ந்துறங்குவதை
அமைதியாய் நிற்கும் மரங்கள்
பறை சாற்றுகின்றன
தனித்திருக்கும் தருணங்களில்
முடியைக் கோதி விடுகின்றது
கையிலிருக்கும் பொருட்களை
சட்டெனத் தட்டிவிட்டுத் தங்குகிறது
பின்னரது என்னோடு
குழைந்து குழைந்து பேசுகிறது
ஆனால் அதன் இதமான பேச்சை
சரியாகப் புரிந்துகொள்ள
மொழிதான் எனக்குத் தெரியவில்லை
உடன் புல்லாங்குழலிடம்
காற்றின் மொழியை பெயர்க்கச் சொல்கிறேன்
அது மனதிற்கிதமான மெல்லிசையாக
அதனை மொழி பெயர்த்தது
நான் இப்போது காற்றை
மெய் மறந்து ரசித்துக் கொண்டிருக்கிறேன்
ஆனால் காற்று
ஒருபோதும் அறிந்திருக்கவில்லை
தானொரு இனிமையான இசையென்பதை.

- அப்துல் ஜமீல்

ஆதலால் காதல் செய்வீர்

■ பு.பிரசாத்

காதலில் என் இதயம் பலவீனப்பட்டிருக்கிறது. கடற்கரையில் வழியும் என் கண்ணீரை உலர்த்திக் கொண்டு உடைந்த மனதுடன் இருக்கிறேன். இத்தோடு எல்லாம் முடிந்துவிட்டதாய் ஒரு உணர்வு. வாழ்க்கை இதைவிட மோசமானதாக இருக்கப்போவதில்லை. தோல்வியின் வலி எனக்குள் நிறைந்திருக்கிறது. யாருக்குத்தான் காதல் பிடிக்காது. உலகம் உண்டான, உயிர் உண்டான காலம் முதலே காதல் இருந்திருக்கிறது. நெருக்கமும், பிரிவும் அதன் துயரமும் எல்லாம் நிறைந்த இன்பமும் என்று இன்னுமெல்லாம் சொல்லிக்கொண்டே போகலாம். எந்த மனிதனுக்குள்ளும் காதல் விளைந்துதான் மடிந்திருக்கும். அதை நிரூபிக்க நீங்களும் நானும் இப்போது இங்கு சாட்சிகள்தான்.

இலக்கியங்கள் உன்னதமான பல காதல் காட்சிகளை விரித்திருக்கிறது. நாம் மூழ்கி வளர்ந்திருக்கிறோம். வியந்திருக்கிறோம். எல்லையற்ற அதன் இருப்பு உலகமெங்கும் நிஷரூபிக்கப்பட்டிருக்கிறது. வழியெல்லாம்

உங்கள் ஆக்கங்களை 'வாசிகை' , ஆசிரியர், புதுவிதி, 107 : இராச வீதி, கோப்பாய், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கோ அல்லது **sinnarajavimalan18@gmail.com** என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ அனுப்பி வைக்கலாம்.

சலிப்போடு பயணப்படும்போது நமக்கு இளைப்பாற ஏதோ வேண்டியிருக்கிறது. இங்கே இருந்து இந்தக் காதல் கதைகளைப் புரட்டலாம். இவர்களும் நம்மைப் போல் காதலில் உடைந்து போனவர்கள் தான். அதை தம் இலக்கியங்களில் எப்படியெல்லாம் கொண்டாடித் தீர்த்திருக்கிறார்கள் என்று படிக்கும் உங்களுக்குப் புரிய வாய்ப்பிருக்கிறது.

என் மனதுக்கு நெருக்கமான குறுநாவல்கள் மூன்றை இங்கு குறிப்பிடுகிறேன். மொழி பெயர்ப்பு நூல்கள் மீதிருக்கும் ஒரு விருப்பத்தி னால் இவை மூன்றும் அவ்வாறான மொழி பெயர்ப்பு நூல்கள் தான். ஒவ்வொரு நூலும் எழுப்பும் மனவெழுச்சி உங்களை நிச்சயமாக அலைக்கழிக்கும். பருமனான நூலைப் பார்த்ததும் பதறுபவராக இருந்தால் கூட பயப்படவேண்டாம்.

(18ஆம் பக்கம் பார்க்க)



பெயார்வே இலக்கிய விழா 2018

பின்பற்றப்படவேண்டிய முன்னுதாரணம்



பல புதிய நாவலாசிரியர்களை உருவாகுவதற்கு அடித்தளமாக 'பெயார்வே' நிறுவனம்

வெளிநாடுகளில் இருக்கின்ற பல உலகப் பிரசித்தி பெற்ற வியாபார நிறுவனங்கள் ஒவ்வொரு வருட இறுதியிலும் தமது நிறுவனம் இலாபமாகப் பெறுகின்ற ஒரு பங்கினை தர்மப் பணிகளுக்காக ஒதுக்கி சமூகப் பொறுப்புள்ளவர்களாகவும் காணப்படுகின்றனர். அதை தமது வியாபாரத்தின் கலாசாரமாகவும் கொண்டுள்ளனர். அதிக சமூகப் பொறுப்புள்ள பணிகளை முன்னெடுப்பவர்களுக்கு விருதுகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

அப்படிப்பட்ட ஒரு உயரிய சமூகச் சிந்தனையோடு பயணிப்பதாகப் இலங்கையில் பாரிய கட்டடப் பணிகளில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டிருக்கும் பெயார்வே ஹோல்டிங்ஸ் நிறுவனமும் காணப்படுகிறது. அவர்கள் கடந்த நான்கு வருடங்களாக இலங்கை வாழ் மக்கள் அனைவருக்கும் பொருந்தக் கூடிய வகையில் ஒரு விருது விழாவினை அறிமுகப்படுத்தி நடத்தி வருகின்றனர். ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் தொடக்கம் அதற்கு அடுத்த ஆண்டு மே மாத இடைவெளிக்குள் பிரசுரமாகும் நாவல்களை இனங்கண்டு அவற்றில் தலைசிறந்ததெனக் கருதப்படும் முதல் நாவலுக்கு ரூபா ஐந்து லட்சமும் அதைத் தொடர்ந்து சிறந்ததாகக் கருதப்படும் நான்கு நாவல்களுக்கு தலா ரூபா ஒரு லட்சத்தையும் வழங்கிவருகின்றது. இலங்கையில் காணப்படும் மும்மொழிகளுக்கும் மூன்று பிரிவுகளாக அப் போட்டி நடத்தப்பட்டு விருதுகளும், பணப்பரிசும் வழங்கப்படுகிறது.

அந்த வகையில் கடந்த திங்கட் கிழமை 03.12.2018 அன்று கொழும்பு காலி முகத்திடலில் அமைந்துள்ள ஹோல்பேஸ் ஹோட்டலில் நான்காவது தடவையாக பெயார்வே சர்வதேச இலக்கிய விருது விழா - 2018 நடைபெற்றது.

தொடர்ச்சியாக நான்கு வருடங்கள் இவ்விழாவிற்கூடாக இலங்கை நாவலாசிரியர்கள் பெரிய தொகையினைப் பரிசாகப் பெற்றுக் கொண்டு வந்திருக்கின்றனர்.

மும்மொழிகளிலும் நடைபெற்று வருகின்ற இந்தப் போட்டிக்கு இம்முறை தமிழ் பிரிவுக்கு மொத்தம் 12 நாவல்கள் வந்திருந்தன. அதிலே பிரமிலா பிரதீபன் எழுதிய கட்டப்பொல், சீமன் பத்திநாதன் பெனான்டோ எழுதிய தோற்றுப் போனவர்கள், முஸ்டீன் எழுதிய இரட்டைக்குளியல், நாராயணி யோகேந்திரநாதன் எழுதிய இடிபடும் கோட்டைகள், ஏ.எம்.எஸ் வேலழகன் எழுதிய பனிச்சையடி முன்மாரியும் சட்டக்கிணறும் ஆகிய நாவல்கள் பரிசுக்குரியனவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டன.

அதில் முதல் தரமான நாவலாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு ரூபா ஐந்து லட்சத்தைப் "தோற்றுப் போனவர்கள்" என்ற நாவல் பெற்றுக் கொண்டது.

இலங்கையைப் பொறுத்தவரை இவ்விழாவே அதிக பணத்தொகையைப் பரிசாகக் கொடுக்கின்றதாகக் காணப்படுகிறது. உண்மையில் அது போன்ற ஊக்குவிப்பே இலக்கிய கர்த்தாக்களுக்கு அவசியமாகிறது. தொடர்ந்தும் ஒரு நம்பிக்கையோடு எழுதவும், எழுதிய தமது எழுத்துக்களைப் பிரசுரிக்கவும் அவர்கள் பெறும் பணப்பரிசு உதவியாக இருப்பதாக பரிசு பெற்ற எழுத்தாளர் ஒருவர் குறிப்பிட்டார். கடந்த மூன்று ஆண்டுகள் தொடர்ச்சியாக இந்த விழாவில் தனது நாவல்களுக்காக பரிசினைப் பெற்று வந்திருப்பவர் நாராயணி யோகேந்திரநாதன். முதல் இரண்டு தடவையும் தனது தொடர் நாவலான நீந்திக் கடந்த நெருப்பாறு என்ற நாவல்களுக்கும் தற்போது இடிபடும் கோட்டைகள் என்ற நாவலுக்கும் விருதினையும், பணப் பரிசினையும் பெற்றிருக்கிறார்.

இன, மத, மொழி கடந்த செயற்பாடாகக் காணப்படும் இவ்விருது விழாவினை பெயார்வே எண்ணியிருந்தால் சிங்கள இலக்கியத்திற்கு மட்டும் ஒரு விருது விழாவாக அமைத்திருக்க முடியும். ஆனால் ஏனைய மொழிகளைப் பற்றிச் சிந்தித்திருக்க வேண்டிய அவசியம் அவர்களுக்கு இல்லை. ஏனெனில் அவர்கள் வியாபார நடவடிக்கைகள் எதுவும் ஏனைய மொழிகள் சார்ந்த இடங்களில்லை. ஆனால் அவர்கள் கொண்டுள்ள பல் நோக்கு இலக்கியப் பார்வையும், சிந்தனைகளுமே அவர்களை இவ்வாறு சிந்திக்க வைத்துள்ளது. இதனை முன்னுதாரணமான ஏனைய கம்பெனிகளும் ஏற்றுக் கொண்டு செயற்பட்டால் இலக்கிய உலகம் மேம்படும். பல புதிய நாவல்கள் வெளிவரும். பல புதிய நாவலாசிரியர்கள் உருவாகுவார்கள். புதிய சமூகச் சிந்தனை மேம்படும். முயல்வார்களா?







சிவகார்த்திகேயனின் தயாரிப்பில் உருவான
படம் வரும் 21 ஆம் திகதி வெளியாகிறது.
ப்படம் வெளியாகும் நாளில் விஜய்
தியின் 'சீதக்காதி', தனுஷின் 'மாரி 2',
ம் ரவியின் 'அடங்கமறு' படங்களும்
யாகின்றன.
னால் திரையரங்குகளுக்காக கடும்
டி நிலவும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சிவகார்த்திகேயன் தயாரிப்பில் 'பிளாக் ஷீப்' டீம் இயக்கத்தில் ரியோ ஹீரோவாக நடிக்கும் படத்தில் ஷிரின் கான்வாலா என்பவர் நாயகியாக அறிமுகமாக இருக்கிறார். நகைச்சுவை கலந்து சமூக அக்கறையுள்ள கருத்துகளையும் படத்தில் சொல்லவிருக்கின்றனர்.

ராஜசேகர் இயக்கத்தில் ஜீவா - அருள்நிதி இணைந்து நடிக்கவுள்ள புதிய படத்தில் நாயகியாக மஞ்சிமா மோகன் ஒப்பந்தமாகி இருக்கிறார். யுவன் ஷங்கர் ராஜா இசையமைக்கும் இப்படத்தின் படப்பிடிப்பு இம்மாதம் தொடங்குகிறது.

சீனாவில் 10,000 திரையர்ங்குகளில் 56,000 திரைகளில் 3டி இல் வெளியாகவுள்ளது '2.0' படம்.

550 கோடி இந்திய ரூபா செலவில் உருவான படம் தமிழை விட பிற மொழிகளிலேயே அதிகம் வசூலிக்கிறது.

2019 மே இல் படம் வெளியாகிறது.

தொகுப்பு :- சி.விமலன்

மீள்வருகை

சிம்பாப்வே கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரான ரரெண்ட தைபு 2001 ஆம் ஆண்டு மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கெதிரான ஒருநாள் போட்டியில் அறிமுகமாகி 2012 ஆம் ஆண்டு நடைபெற்ற நியூசிலாந்து அணிக்கெதிரான ஒருநாள் போட்டியுடன் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வுபெற்றிருந்தார்.

சர்வதேச கிரிக்கெட்டில் 28 டெஸ்ட் போட்டிகளிலும் 150 ஒருநாள் போட்டிகளிலும் 17 இருபதுக்கிருபது போட்டிகளிலும் விளையாடிய தைபு 29 வயதில் ஓய்வு முடிவை அறிவித்தமை அன்றைய காலப்பகுதியில் ஆச்சரியமாகவே நோக்கப்பட்டது. கிறிஸ்தவரான தைபு தேவாலயத்தில் பணிபுரிவதற்காகவே கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாகக்

குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில் இலங்கையில் அடுத்த வருடம் நடைபெறவுள்ள உள்ளூர் தொடரின் மூலம் அவர் தனது மீள்வருகையை நிகழ்த்தவுள்ளார் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்தியாவும் களத்தில்

2032 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளை நடத்துவதற்கு முதன்முறையாக இந்திய ஒலிம்பிக் சங்கம், சர்வதேச ஒலிம்பிக் சங்கத்திடம் விண்ணப்பித்துள்ளது. இந்தாண்டின் ஆரம்பத்தில் சர்வதேச ஒலிம்பிக் சங்கத்தின் தலைவரான தோமஸ் பச் இந்தியாவுக்கு வருகை தந்தபோது இது குறித்து அறிந்து வரவேற்றிருந்தார்.

டெல்லி மற்றும் மும்பை நகரங்கள் போட்டியை நடத்துவதற்கான நகரங்களில் முன்னணியில் திகழ்ந்தாலும் ஏனைய சில நகரங்களும் பரிசீலனையில் உள்ளன. ஆனாலும் ஏற்கனவே 2032ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளை நடத்துவதற்கு சீனா, அவுஸ்ரேலியா, ஜேர்மனி ஆகியவற்றோடு இம்முறை ஆசிய விளையாட்டுப் போட்டிகளை வெற்றிகரமாக நடத்திய இந்தோனேசியாவும் தனியே நடத்துவதற்கு விருப்பம் தெரிவித்துள்ள அதேவேளை வடகொரியாவும் தென்கொரியாவும் இணைந்து நடத்துவதற்கும் முன்வந்துள்ளன.

அந்தவகையில் 2032 ஒலிம்பிக் போட்டியை நடத்துவதற்கான நகரம் 2025 ஆம் ஆண்டே அறிவிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கோபா லிபர்ரடோர்ஸ் உதைபந்தாட்டத் தொடரின் நிவர் பிளேற் – போக்கா ஜூனியர்ஸ் கழகங்களுக்கிடையில் 1913 ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வரும் 'சுப்பர் கிளாசிகோ' போட்டி மிகப் பிரபலமானது. ஆர்ஜென்ரீனாவில் உள்ள உதைபந்தாட்ட ரசிகர்களில் 70 வீதமான ரசிகர்கள் இவ்விரு கழகங்களின் ஆதரவாளர்களாகவே உள்ளமை இதனை எடுத்துக் காட்டுகின்றது.

இந்தவகையில் இந்தாண்டுக்கான 'சுப்பர் கிளாசிகோ' போட்டியின் இரண்டாவது லெக் ஆட்டம் இரண்டு வாரங்களுக்கு முன்னர் ஆர்ஜென்ரீனாவின் புவனர்ஸ்அயர்ஸ் நகரில் நடைபெற இருந்தது. ஆனாலும் போட்டி ஆரம்பிக்கும் முன்னதாகவே நிவர் பிளேட் ரசிகர்கள் போக்கா ஜூனியர்ஸ் வீரர்கள் வந்த பஸ் மீது தாக்குதலை மேற்கொண்ட காரணத்தினால் போட்டி இடைநிறுத்தப்பட்டது.

இந்நிலையில் இப்போட்டி எதிர்வரும் 9 ஆம் திகதி ஸ்பெய்னின் மட்ரிட் நகரில் நடைபெறுமெனத் தென்னமெரிக்க உதைபந்தாட்டக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

விண்ணப்பம் கோரல்

இந்திய மகளிர் கிரிக்கெட் அணியின் பயிற்சியாளராக விளங்கிய றொமேஸ் பவாரின் பதவிக்காலம் கடந்த மாதத்தோடு முடிவடைந்தது. ஆனாலும் அவருக்கும் மிதாலி ராஜ்ஜுக்கும் இடையில் ஏற்பட்ட சர்ச்சையால் அவரது ஒப்பந்தம் நீடிக்கப்படவில்லை. தற்போது அப்பதவிக்கு இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

இரண்டு வருட காலத்திற்கு ஒப்பந்தம் செய்யப்படவுள்ள பயிற்சியாளர் 60 வயதுக்குள் இருப்பதோடு எந்த நாட்டைச் சேர்ந்தவராயினும் சர்வதேச போட்டிகளில் விளையாடிய வீரராகவும் இருத்தல் வேண்டும். அந்தவகையில் இந்தப்பதவிக்கு இலங்கை அணியின் முன்னாள் பயிற்சியாளர்களான டேவ் வட்மோர், ரொம் மூடி மற்றும் இந்தியக் கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரரான வெங்கடேஷ் பிரசாத் ஆகியோர்களின் பெயர்கள் பரிசீலனையில் உள்ளதாகக் கூறப்படுகின்றது.

நேர்முகத்தேர்வு எதிர்வரும் 20 ஆம் திகதி மும்பையில் நடைபெறவுள்ளது.

முடிவுக்கு வந்தது

பிரான்ஸில் நடைபெற்றுவரும் லீக்1 உதைபந்தாட்டத் தொடரின் இந்தப் பருவகாலத்தில் பி.எஸ்.ஜி. அணி தான் விளையாடிய 14 போட்டிகளிலும் வெற்றி பெற்று தொடர்ச்சியாக 11 வெற்றிகளைப் பெற்ற ரொற்றின்காம் அணியின் 57 வருட கால சாதனையை இரண்டு வாரங்களுக்கு முன்னர் முறியடித்திருந்தது. இதனால் புள்ளிப்பட்டியலில் முதலிடம் வகிக்கும் பி.எஸ்.ஜி. அணியின் வெற்றிப்பயணம் தொடரும் என்றே கருதப்பட்டது.

அதிலும் கடந்தவாரம் புள்ளிப்பட்டியலில் 11 இடத்தில் இருக்கும் போர்டியாக்ஸ் அணியுடன் விளையாடிய போட்டியிலும் பி.எஸ்.ஜி. அணி இலகுவாக வென்று விடும் என்ற எதிர்பார்ப்பே காணப்பட்டது. ஆனாலும் இப்போட்டி 2:2 என்று சமநிலையில் முடிந்ததன் மூலம் பி.எஸ்.ஜி. அணியின் தொடர் வெற்றிக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது.

குறும்பட்டியல் வெளியீடு

இந்த வருடத்துக்கான சிறந்த ஆபிரிக்க உதைபந்தாட்ட வீரரைத் தெரிவு செய்வதற்கான 34 பேர் கொண்ட குறும்பட்டியல் கடந்தவாரம் வெளியிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் எகிப்தின் நட்சத்திர வீரரான முகமட் சாலா, செனகலின் சடியோ மனே, மடகாஸ்கரின் அண்ரியட்சிமா ஆகியோர்களது பெயர்களும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2019 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஆபிரிக்க கிண்ணப்போட்டிகளுக்கு முதன்முறையாக மடகாஸ்கர் தெரிவானதில் அண்ரியட்சிமாவினது பங்களிப்பு அதிகம் இருந்ததனால் அவருக்கும் முகமட் சாலாவுக்கும் இடையில் போட்டி கடுமையாக இருக்கும் எனக் கருதப்படுகின்றது.

எதிர்வரும் 2019 ஜனவரி மாதம் 8 ஆம் திகதி செனகலின் டாஹர் நகரில் நடைபெறவுள்ள விழாவில் மூவர் கொண்ட இறுதிப்பட்டியல் வெளியிடப்பட்டு வெற்றியாளரும் அன்றைய தினமே அறிவிக்கப்படவுள்ளார்.

இந்தப் பத்திரிகை லக்ஷ்மி பிறின்டர்ஸ் (பிறைவேற்) நிறுவனத்தால் 08.12.2018 அன்று 107, இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.